# ஞானபோதினி.

புத்தகம். III. } 1900வரு மேமீ 20உ { நே. 10.

## நக்கீரனார் தெய்வப்புலமை மாட்சி.

அவ்வாறாயினும் அந்நூலில் அதனாசிரியர் திருப்பரங்குன்றை முதலெடுத்தோதுதலின், அவ்வாற்றுனது திருப்பரங்குன்றிற் செய்யப்பட்டதென்று உய்த்துணர்ந்து கொள்ளாமோவெனின்;— கொள்ளாமன்றே, ஆசிரியர் நக்கீரனார் மதுரையிற்றோன்றி யதனையடுத்துள்ள பரங்குன்றின் மிக்கபற்றுடையராகலானது பற்றி யதனைமுதலெடுத் தோதினாராதலின்; திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளருந் தாந்தோன்றிய நகரைச் சிறந்தெடுத் தோதுதலும் இதனோ டொருபுடை யொற்றி யுணரப்படுமென்பது. இனி ஏட்டுச்சுவடிகளில் திருமுருகாற்றுப்படையின்கீழ்க் "குன்றமெறிந்தாய்" எனவும் "குன்றமெறிந்ததுவும்" எனவும் இரண்டு வெண்பாக்களெழுதப்பட்டுள்ளன; இவ்விரண்டு வெண்பாக்களின் நடை வளத்தையும், சொல்லமைதி, பொருளமைதிகளையும் உற்று நோக்கும்வழி, அவையிரண்டு மிகப்பழையகாலத்தன வென்பதும், நக்கீரனா ரியற்றியனவேயாமென்பதும் இனிதுவிளங்கும். அல்லதூஉம் பத்துப்பாட்டுக்க ளொவ்வொன்றின்கீழும் அவ்வப்பாட்டுக்களின் கருத்துப்பொருளை விளக்கியும், அவ்வப்பாட்டுடைத்தலைமக்கள் பெரும்புகழ்கிளந்தும் ஒருவாற்றான்வரலாறு தெரிப்பனவாகிய ஒன்றிரண்டுமூன்று வெண்பாக்களெழுதப்பட்டிருத்தலின் மற்றவை யவ்வவாசிரியரால் தாந்தாம்பாடிய பாட்டுக்களின்கீழ் எழுதப்பட்டன வென்பது ஐயுறவின்றித் துணிந்து கொள்ளப்படுமென்பது. இம்முறை வழுவாது அப்பத்துப்பாட்டுக்களின் ஒன்றாகிய திருமுருகாற்றுப்படையினும், அதனாசிரியர் தாமும் அதன் வரலாறுகிளக்கும் இரண்டு செய்யுட்களெழுதினார். இனி யிவ்விரண்டு செய்யுட்களும் ஆசிரியர்தாம் ஆற்றுப்படை மொழிந்த பொழுதியற்றப்பட்டனவோ, ஆற்றுப்படையை யேனையொன்பது பாட்டுக்களுடன் கோவைசெய்து முறைப்படுத்திய போதியற்றப் பட்டனவோ வென்றாராயலுறுவார்க்குத் துணிதற்கருவி யின்மையின் அவையும் விளங்கா. ஆயினும், கோவை

செய்துமுறைப்படுத்தியபோது ஒருதலையான் அதன்வரலாறு தெரித்தற்பொருட்டு அவை யெழுதப்பட்டிருத்தல் வேண்டுமென்பது துணியப்படும். இவ்விரண்டிற் "குன்ற மெறிந்ததுவும்" எனுஞ்செய்யுளில் "இன்றெம்மைக், கைவிடா நின்றமையுங் கற்போதும்பின் மீட்டமையும்" என்று கூறப்படுதலின், நக்கீரனார் மலை முழையுட் சிறைப்பட்டவாறும், பின் மீட்கப்பட்டவாறும் ஒருதலையான் நிகழ்ந்தன வென்பது பெறப்படும். இனி, "குன்ற மெறிந்ததுவும்" என்னுஞ் செய்யுளும் "குன்ற மெறிந்தாய்" என்னுஞ் செய்யுளு மொழிய வேறு எட்டுச்செய்யுட்கள் திருமுருகாற்றுப்படைச்சுவடிகளின்கீழ் எழுதப்பட்டிருக்கின்றன. மற்றிவையும் ஆசிரியர் நக்கீரனாரியற்றியனகொலென்று ஆராயப்புகுந்தவழி, அச்செய்யுட்களில் 'வீரவேல்' 'தாரைவேல்' 'தீரவேல்' என்றற்றொடக்கத்து விரவியற்சொற்றொடர்களும், 'நம்புகிலேன்' எனுந் தொன்னெறிப்பட்டியலாச் சொல்லமைப்பும், 'கோலப்பா' 'வேலப்பா' முதலிய தொன்றுதொட்டு நடவாவழக்கும் பயிலக்காண்டலானும், அவைதம்முள்ளும் இறுதிக்கணின்ற இரண்டுசெய்யுட்களும் "ஆசையா னெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப், பூசையாக் கொண்டே புகல்" எனவும், "நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத், தற்கோல நாடோறுஞ் சாற்றினால் - முற்கோல, மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித், தானினைத்த வெல்லாந் தரும்" எனவும் நக்கீரனாரைப் படர்க்கைப்படுத்துரைத்துத் திருமுருகாற்றுப்படையைச் சிறப்பித்துக் கூறுதலானும், திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளர் தாமோதியபதிகத்தின்கீழ்த் தம்பெயராக் கிளந்துகூறிப் பதிகச் சிறப்புமமைத்துக்கடைக்காப்பிடுமாறுபோல, ஆசிரியர்-நக்கீரனார் தாமுந் தம்பெயரையு நூற்சிறப்பையும் அங்ஙனம் படர்க்கைக்கண்வைத்து வேறுபடுத் தோதினாரென்பார்க்கு "இன்றென்னைக், கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு, மெய்விடா வீரன்கை வேல்" என்று தம்மைத் தன்மைக்கண் வைத்தோதிய ஆசிரியர் தாமே தம்மைப்பின்படர்க்கையில் வைத்து வேறுபடுத்தா ரென்றல் பொருந்தாமையானும், அன்றியங்ஙனம் வேறுபடுத்தாரெனக் கொள்ளினும் "ஞானசம்பந்தன் உரைசெய்த" என்பதுபோற்றம்மை "நக்கீரன் றனுரைத்த" என்றுவைத்துக் கூறுவதன்றி "நக்கீரர் தாமுரைத்த" என்றுயர்த்துக் கூறுதல் ஏலா

மையானும், அவர் தம்மையங்ஙனம் உயர்த்துக்கூறுரென்பது "சிறியேன் சொன்ன வறிவில்வாசகம்" எனப் பிறுண்டும் அவர் கூறு மாற்றுற் றெளியக்கிடத்தலானும் அவை பிற்காலத்தாரால் நூற்சிறப்பாக எழுதப்பட்டனவாமென்பது இனிதுவிளங்கும். அல்லதூஉம், ஆசிரியர், நக்கீரனார் கூறிய இரண்டு செய்யுட்களி னிறுதிச் செய்யுளினிறுதியிற்கிடந்த "மெய்விடா வீரன்கைவேல்" எனுஞ் சொற்றொடரிலுள்ள 'வீரவேல்' எனுமொழிகளை வேறு பிரித்தெடுத்துக்கொண்டு "வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட" என்று தொடங்குதலானும், ஏனை யொன்பது செய் யுட்களும் அங்ஙனம் அந்தாதித்தொடைப்பட நிகழாமையானும் முன்னிரண்டு செய்யுட்களும் ஆசிரியர்-நக்கீரனா ரியற்றினவாமெ ன்பதூஉம், பின்னெட்டும் பிற்காலத்தாரியற்றியனவா மென்ப தூஉம் தெற்றென வுணரப்படுமென்பது.

இனி, இங்ஙனம் ஆசிரியர்-நக்கீரனார் வரலாறு பலநூல்களில் ஒன்றோடொன்று மலைவுபட நிகழ்த்தப்படுதலின், மற்றது முழுவ தூஉம் பொய்படும் போலுமென நினையற்க. ஆசிரியர் தாம் இறை வன்றந்த "கொங்குதேர் வாழ்க்கை" எனுஞ்செய்யுட்குக் குறை கூறிய தங்குறுமொழியைப் பொறுத்தருளுமாறு 'திருவெழு கூற்றிருக்கை'யிற் "சிறியேன் சொன்ன வறிவில் வாசகம், வறி தெனக் கொள்ளா யாகல் வேண்டும்" எனவும், 'பெருந்தேவபா ணி'யிற் "கூடலால வாய்க் குழகனுவ, தறியா தருந்தமிழ் பழித் தன னடியேன்" என்வும் "எம்பெருமான் வேண்டியது வேண டா, திகழ்ந்தேன் பிழைத்தே னடியேன்" எனவுங்கூறிக் குறையிரத்தலானும், இவை யெல்லா நிகழ்ந்த விடம் மது ரைமாநகரென்பதூஉம், இறைவன் விழித்த நுதற்கண்வெப்பம் தம்மெய்யிற்பற்றி எரிவு செய்ததென்பதூஉம், 'திருவெழு கூற் றிருக்கை' இறுதிவெண்பாவில் "ஆலவாயிலமர்ந்தாய்—தணிந் தென்மேன், மெய்யெரிவு தீரப்பணித்தருளு வேதியனே" எனவும், 'பெருந்தேவபாணி' இறுதி வெண்பாவில் "என் மேற், சீற்றத் தைத் தீர்த்தருளுந் தேவாதி தேவனே, யாற்றவுநீ செய்யு மருள்" எனவும் அவர்தாமே கூறுமாற்றுற் றெளியக் கிடத்தலானும், இறைவன் றமக்குக் கட்டளையிட்டவாறு கயிலைகாணச்செல்லு நெறியின் மலைமுழையிற் றாம்சிறைபுகுத்தப்பட்டுப் பின் செவ் வேள் திருவருளால் அதனினின்று மீண்ட முறைமை "இன்றெம்

மைக், கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பின் மீட்டதுவு, மெய் விடா வீரன்கைவேல்" என்றவர் 'திருமுருகாற்றுப்படை' யிறுதி வெண்பாவிற் பொதுப்பட வைத்துரைப்பதன்கட் பெறப்படுதலா னும், தாங் கயிலைகாணச்சென்றமை முற்றுப்பெறாது வியத்தகு பரிசாற் காளத்தியையே யதுவாகக்காணும்படி நேர்ந்த பெற்றி நோக்கி யவ்விரண்டற்கும் ஒற்றுமைகொளுத்திக் "கயிலைபாதிகா ளத்திபாதியந்தாதி" அருளிச்செய்ததனை லவ்வுண்மை யறியக் கிடத்தலானும் அவ்வரலாறுமுழுவதூஉ மெய்ப்பட நிகழ்ந்த தாமென்பது ஐயுறவின்றி நிலையிட்டுரைக்கப்படு மெனக்கொள்க.

இனி, இறைவன் றிருவுருக்கொண்டு நக்கீரனார் விழியெதிர் தோன்றினா னெனவும், பின் அவரோடு வழக்காடி மறைந்தானெ னவுங் கூறுவனவெல்லாம் யாண்டும் இயற்கையின் நடவாச்செயற் கையாதலின் மற்றிவை யெல்லாம் மெய்த்திறங் கொண்டு நிகழாப் பொய்ப் பொருள்களா மென்று வேறொரு சாரார் தமக்குத் தோன்றியவாறெல்லாம் பிறழக்கூறி நலமுறுர். ஆசிரியர் - நக்கீ ரனார்தாமே அங்ஙன நிகழ்ந்தவற்றையெல்லாம் இனிதெடுத்துக் கூறுதலின், அப்பெற்றியார் கூறும் அறிவில்லுரை வறிதாய்ப் போ லிப்படுமென்பது நல்லுணர்வுடையா ருணர்ந்து கொள்வ ரென விடுக்க. அல்லதூஉம், மக்கட்பிறவியின் உறுதியுணர்ந்து உலக வாழ்க்கையி லமரலொழிந்து அவை மாறிமாறிவரு மியல்புணர்ந் து கழித்துத்தம்முயிர்க்கு நீங்காநிலைக்களனாயுள்ள துளக்கறும் பொருளியல்பறிந்து அப்பொருட் செயலினும் அறிவினுந் தஞ் செயலு மறிவுந்தோய்ந்து ஒருபெற்றியே யொருபேரின்பநுகர்ந்த மைய நினைந்திருக்கும் அறிவுடை நன்மக்கள் பண்டைநாட் டொ டங்கி யின்றளவும் நிலவப்பெற்ற இச்செந்தமிழ் நாட்டொடு, அப் பிறவியினுண்மைப் பயனறிடாது தம்வாணாண் முழுவதூஉம் உலக வாழ்க்கையிலழித்து வேறோருறுதி நாடாது, அங்ஙனங் கழித்த லையே தமக்குப்பெருமதிப்பாகக் கொண்டொழுகும் மாக்கள் நிறையப்பெற்ற ஏனைநாடுகளை ஒப்பிட்டு, அவ்வொப்புமையா லிச் செந்தமிழ்நாட்டில் நிகழ்ந்த அரும்பேரற்புதங்களைப் பொய் யென்று நினைந்தொழுகுவார்க்கு நல்லறிவு கொளுத்தி யவரைச் செந்நெறிக் கடாவுதல் ஒருவாற்றானுஞ் சாலாததொன்றாமென வொழிக. திருஞானசம்பந்தர் முதலான அருட்டிருவாளருந் தாந்தா நிகழ்த்திய அற்புதங்களையும், இறைவன் றமக்குச்செய்யும்

அருட்பாடுகளையுந்தாமே தத்தஞ்செய்யுட்களில் அமைத்துக் கூறுதலும், அதனைப் பிற்காலத்தறிவுடை நன்மக்கள் பலரு * மெய்யெனத்தேறி நன்கு மதித்தலுங்காண்க. இறைவன் றன்னடியார் பொருட்டு இயற்றிய திருவிளையாடல்களும், திருத்தொண்டர் பிறருய்யும்பொருட்டு அவ்விறைவனருள்வழிநின்று நிகழ்த்திய பேரற்புதங்களும் இச்செந்தமிழ் நாட்டிற்போல வேறு பிறவற்றில் நிகழக்காணாமையான் வேற்றுநாட்டிலுள்ள மாக்கள் இன்னோரன்னவற்றைக்கேட்டலும் பெருநகைபுரிந்து எள்ளுவர். அதுபற்றியவர்க்கு இரங்குவதேயன்றி யவரை யிகழார் பெரியோரென்பது. யாவராயினுமாக, இறைவன் ஒருதிருவிளையாடல் புரிந்தானென்றுதல், ஒருதிருத்தொண்டர் ஒருபேரற்புதம்நிகழ்த்தினா ரென்றுதல் கேட்டுழிக் கதுமென எள்ளிநகையாடாது அங்ஙன நிகழ்ந்ததனுண்மையை யாராய்ந்துணர்தல் அவர்க்கு இன்றியமையாததாமென்பது கடைப்பிடிக்க.

இனியொரு சாரார் திருவிளையாடற் புராணத்தையே கருவியாகக்கொண்டு தமிழ்ச் சங்கமெனவொன்றில்லை யெனவும், காசியிலிருந்த வடமொழிச்சங்கத்தை நோக்கித் தமிழ்ப்புலவர் புனைந்தெடுத்துக்கட்டிய கட்டுரையதுவாமெனவும், தமிழ்ப்புலவர் பொய்யும்புளுகும் புனைந்து கொண்டு அரசரையிரந்து பரிசுபெற்றுண்டு நாட்கழிக்கும் மிடிபடுவாழ்க்கைக் கையறியாமாந்தரெனவும், அவர் கூறுமாறுபோலத் தமிழ் அத்துணைப் பெருஞ்சிறப்பினதும் தொன்று தொட்டது மன்றுமெனவுந் தமக்குத் தோன்றியவாறெல்லாம் இளிவரக்கூறிப் பெரிதுமார்த்தலின், அவருரை புரைபடுமுகத்தாற் றமிழின்றொன்மையும், தமிழிலிருந்து பல சொற்கள் வேறு பாடைகளில் வழங்குதலும், தலைச்சங்கமிருந்த காலமும் கடைச்சங்கவரலாறும் எண்டெடுத்துக்காட்டி நிறுவியவ்வாற்றா னாசிரியர்-நக்கீரனார் காலமுங்காட்டுதும்.

இனி, இப்போது 'இந்து மகாசமுத்திரம்' என மிகப்பிரசித்தி யுற்று விளங்கும்மாகடல் பல்லாயிர வாண்டுகளுக்குமுன் நிலனாயிருந்ததென்பது ஆங்கிலநூல் வல்லார்க்கு இனிதுவிள

* மாக்ஸ்முலர், போப், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை முதலான பேரறிவாளர் பலரும் இன்னோரன்ன பேரற்புதங்களைப் பெரிதுந்தேறி நன்கு மதித்தல் காண்க. 'இந்தியா நமக்கென்ன கற்பிக்கும்?' 'திருவாசக மொழிபெயர்ப்பு' 'திருஞான சம்பந்தர் கால நிர்ணயம்.'

ங்கும். அவர், பல வேறுவகைப்பட்ட தேயங்களிலுள்ள மக்க ளின் உருவமைப்பும் உறுப்பமைவும் ஒத்துநோக்கி யவர்தம் முள் இனங்கண்டுரைப்பதாகிய * மக்களினநூலானும், இயங்கியற் பொருள் நிலையியற்பொருள்களைப் பகுத்துக்கொண்டு ஆராயும் நூல்களானும், அவ்விந்துமகாசமுத்திரத்திலுள்ள சில தீவுகளிற் கண்டெடுக்கப்பட்ட தமிழெழுத்துக்க ளெழுதிய செப்பேடுகள் கருங்கற்களானும் கிழக்கே சந்தாத்தீவுகள் வரையினும் மேற்கே மடகாசிகர் தீவுவரையினும் அகன்று கிடந்த இலெமுரியா என்னும் நிலன் ஒருகாலத்தெழுந்த பெருவெள்ளத்தால் ஆழ்ந்துபோயிற் றென்றும், இங்ஙனமாழ்ந்துபோன பெருநிலன் இந்நிலவுலக முழு வதற்கும் நடுவிற்கிடந்தபெரும்பரப்பாகலான் இறைவனுற் படைக் கப்பட்ட மக்கள் முதன்முத லிந்நிலத்திருந்து பின் நாற்றிசை யினும் பிரிந்துபோய் வேறுபட்டன ரென்றும், அவ்வாறிதிலிருந்த தொல்லோர் வழங்கியபாடை தமிழ்ப்பாடையா மென்றும் பொரு ளிஃதிது விளங்கச் சொல்லுந்தோறும் காரணங்காட்டி நிறுவி விளக்குவர் †. இனி வேறொருசாரார் ஆரியர்கள் முதன்முதற் காஸ்பியன்கடலையடுத்த இடங்களிலிருந்து பின் பன்முகமாகப் பரந்து சென்றார்களென்ப ‡. இனிப்பிறிதொரு சாரார் ஆரியர்கள் காஸ்பியன் கடலையடுத்த இடங்களில் முதன்முதலிருந்தார்களென் பார் மதத்தை மறுத்து, காந்திநேவிய தீபகற்பத்தின் தெற்கில் முதன்முதலிருந்து பின் பன்முகமாகப்பிரிந்து சென்றார்களென் பர் §. அவ்வாறவர் கூறுமாற்றான் ஆரியன் முதன் முதலிருந்து பின் பிரிந்த இடமாத்திரம் பெறப்படுமோமன்றித் தமிழர்களுக்கும் உலகத்திலுள்ள எல்லா மாந்தருக்கும் அஃதேபிடமாமென்பது அதனாற் போதராமையின் யாம் முற்கிளந்துகூறிய இலெமுரியா என்னு நிலப்பரப்பே தமிழர்கள் தொன்றுதொட்டுவதிதற்கு இடமாயிருந்த தென்பதூஉம், அந்நிலப்பரப்பழிந்துபடவே யதனு டனழிந்தோர் போக ஒழிந்தோர் இந்தியா, மலையதீபகற்பம், சீயம், பலுசிதானம், பாரசீகம், அராபியா, துருக்கி, கிரீசு, இத்தலி முத லான பலவேறுவகைப்பட்ட தேயங்களின் தென்பாகங்களிற் சென்று குடியேறி யங்ஙனங்குடியேறிய தேயங்களின் ஒழுகலாற் றிற்கேற்ப நாடோறும் ஒழுக்கமும் உருவமும் பாடையும் வேறு

* Ethnology. † Professor Haeckel ‡ Prof. Sayce.
§ Prof. Penka and Prof. Sayce.

பட்டு வாழ்ந்தார்களென்பதூஉம் இனிது விளங்கும். அது வன்றே, * கடவுள் : ஒன்று : எட்டு : கொல் : ஈன் : வேறு : சுருங்குமுதற் பலதமிழ்ச்சொற்கள் பலவேறுவகைப்பட்டபாடைகளில் வழங்கப்படுவதூஉ மென்க. இன்னும் இதனுற்போதரும் உண்மை என்னெனின்; பண்டை நாளில் மக்கட்பரப் பென்பது இரண்டு கூறுபட்டு, ஒன்று வடக்கே காந்திஙேவிய தீபகற்ப முதலான இடங்களில்வதிய, ஏனையது தெற்கே இலெமுரியா என்னும் பெருநிலப்பரப்பில் வதியப் பின் வடக்கிலுள்ள காந்திஙேவிய முதலான இடங்கள் தட்பமிகுந்து உயிர்வாழ்தற்கு அரிதாய் மாறினமையால ஆண்டுறைந்த ஆரியர் தென்றிசைநோக்கிப் பன்முகமாய்ப் பரந்துபோந்தும் தெற்கிலுள்ள இலெமுரியா என்னு நிலப்பரப்பு வெள்ளங்கொண்டழிதலின் ஆண்டிருந்தோர் வடதிசை நோக்கிப் பன்முகமாய்ச்சென்றும் ஒருவரோடொருவர் விராய் ஒருவர்பாடையை யொருவர்கற்று ஒருவர்ஒழுக்கத்தை யொருவர்தழீஇ ஒருவரை யொருவர் வெற்றிகண்டு ஒருவர் ஒருவரையாண்டு இவ்வாறெல்லாம்ஒன்றுபட்டு வேறுபிரித்துக் காணப்படாநீர்மையராயினு ரென்பதாம். இங்ஙனம் இவ்விருவேறு மக்கட்பகுதிகளும் ஒருங்குகூடி ஒன்ருய்ச்சமைதலின், தாமரை : மீன் : அடவி : நீர் : தீ : காலம் : உலகம் : மணி : முத்து : மென்மை : கருமை : திண்மை : வன்மை : வெண்மை: பசுமை, கருமை : தண்மை : கவான் : ஊன்:அவை:அந்தி : சுண்ணம் : வண்ணம் : பிழை : விழி : பகு : சுடு : கட்டு : தள் : மிகு : சால் : பற முதலிய செந்தமிழ்ச் சொற்கள் வடமொழியினும், சூரியன் : சந்திரன் : அமிழ்தம் : காரணம் : எந்திரம் : சீக்கிரம்: குங்குமம் :சமுத்திரம் : கருமம் : அற்புதம் : பசு : விரோதி : தேவர் முதலிய வடசொற்கள் செந்தமிழினும் கலந்து வழங்குவனவாயின. இனி, 'இந்து மகாசமுத்திரம்' எனப்பெயரிய மாகடல் பல்லாயிர மாண்டுகளுக்குமுன் பெருநிலப்பரப்பா யிருந்ததென்று நீவி ரோதியது பெரிதும் வியத்தக்க தொன்றுகாண், ஆயினும், அதனை ஆங்கிலநூல்வல்லார் கூறுமாறுபற்றி நீவிரும் எடுத்துக்கொண்டுரைத்தலின், மற்றது எம்மனோராற் றேறப்படுந்தகையதன்ரும, என்னை ? தமிழ்நூலிலிருந்து காரண மெடுத்துக் காட்டி நிறுவாமையான் என்னு மெமர்க்குறுதி பயத்தற்பொருட்டுத் தமிழ் நூன்முகத்தானும் அதனைச்சிறிது விளக்கிக்காட்டுதும்.

---

* God : One : Eight : Kill : Yean : Various : Shrink.

தமிழில் மிகப்பழங்காப்பியமென அறிவுடையோர்பலரும் ஒத்தெடுத்த ‘சிலப்பதிகார’த்திற் கிளக்கப்படுவனயாவும் உண்மைப் பொருள்களா மென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்ப முடிந்தது. அதில் ஆசிரியர்-இளங்கோவடிகள் *“வடிவே லெறிந்த வான்பகை பொறாது, பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், குமரிக்கோடுங் கோடுங்கடல் கொள்ள” என்றார்; இனி வேனிற்காதையில் “நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்” என்புழி உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் “அக்காலத்து அவர்நாட்டுத்தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னு மாற்றிற்கு மிடையே † எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ்முன்பாலை நாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாரைநாடும் ஏழ்குறும்பனை நாடு மென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல்கொண்டொழிதலாற் குமரிப்பௌவ மென்றார்” என்று கூறினார்.

---

* காடு காண்காதை † இதனால்,எழுநூற்றுக்காவதம் அகன்று கிடந்த நாற்பத்தொன்பது நாடுகள் கடல் கொள்ளப்பட்டனவென்பது புலனாம். இந்நாள் அளவைப்படி ஒரு காவத மென்பது பத்துமைலாக எழுநூறு காவதமும் ஏழாயிரமைலெல்லையளவாம். ‘இந்து மகாசமுத்திரம்’ இப்போது ஆங்கிலநூல்வல்லார் அளந்தறிந்தவாற்றான் இருநூற்றைம்பது இலட்சஞ் சதுரமைலுடைய தென்பதியாருமறிவர். இதனாலது சிறிதேறக்குறைய ஐம்பதுஇலட்சம் மைல் நீளமும் ஐம்பது இலட்சம் மைல் அகலமுமுடையதென்பது பெறப்படும். பெறவே, இவ்வைம்பது இலட்சம் மைல் நீளத்தில் ஏழாயிரமைல் நிலனாயிருந்து கடல் கொள்ளப்பட்டதென்பது. இப்போதுள்ள மோரீசுதீவுக்கும் வம்பாய்நகரத்திற்கும் இடையிலுள்ள நீர்ப்பரவை இரண்டாயிரத்தைந்நூறு மைல் நீளத்தது. இனி மோரீசுதீவுக்குத் தெற்கேயுள்ள கேர்கியூலன் என்னுந் தீவுக்கும் மோரீசுதீவுக்கு மிடையிலுள்ள நீளமும் அவ்வளவினதேயாம். ஆகவே நீளத்தில் இப்போதுள்ள குமரிமுனையிலிருந்து கேர்கியூலன் என்னுந் தீவுக்குத் தெற்கிலுள்ளவரையிலும் அகலத்தில் மடகர்சிகர் தீவுமுதற் சுமத்திரா, சாவா முதலிய தீவுகளையுள்ளடக்கிய சந்தாத் தீவுகளளவும் நீண்டு விரிந்துகிடந்த தமிழநாடு (இலெமுரியா) கடல்கொண்டொழிந்ததென்க.

நாகபட்டினம்-வேதாசலம்பிள்ளை.

---

# வாழ்க்கைப் பயன்.

## II. சூழ்ச்சி.

[354-ஆம் பக்கந்தொடர்ச்சி.]

வாழ்க்கையின்கண் வென்றி பெறுதற்குச் சாமர்த்தியத்தினும் சூழ்ச்சியே யதிக முக்கியமானது. ஆனாலஃதியற்கையில் அமையப்பெறாதவர்க்கெளிதி லெய்தாது. ஆயினும் பிறர் விரும்பத்தக்கனவற்றைக் கவனிப்பதனாலேதேனும் சிறிது செய்யலாம்.

இன்பம் பயக்கவல்ல அமயங்களைக் கைசோரவிடன்மின். எல்லோரிடத்தும் மரியாதையாயிருமின். மாண்டேக் மாதரசி "மரியாதையைச் செலவின்றிப்பெறலாம்; ஆனால் அதைக் கொண்டெல்லாவற்றையும் வாங்கலாம்" என்று கூறினாள். உண்மையாகவே பொருளினாற் பெறுதற்கரிய பலவற்றையும் இன்சொலாற் பெறலாம். அற்றேல், நீவிர் சந்திக்கு மொவ்வொருவரையும் வசீகரிக்க முயலுமின். 'அவர்களது மனத்தை வென்றுவிட்டால் அவர்தம் பணப்பையையும் கொள்ளலாம்' என்று பர்லே பிரபு எலிசபத் மகாராணிக்குக் கூறினார்.

வன்மை தவறுழியெல்லாம் சூழ்ச்சிவெல்லும். அதற்கு மேற்கோளாகச் சூரியனையும் வாயுவினையும் பற்றிய ஒரு பழைய கட்டுக்கதையை லிலி எடுத்துக்கூறுகின்றார். "சூரியன்வாயு என்ற இருவருக்குள் யாவர் மிக்க வலியுடையாரென்பது பற்றி யெழுந்ததோர் விவாதம் அழகுபெறக் கூறிக்கப்பட்டுளது. ஒரு கனவான் வெளியில் நடந்துசெல்வுழிக் காற்றானது அவர் மேலாடையைப் பறக்க அடிக்க எண்ணி மிக்க வலியுடனே ஒலியிட்டுச் சுழன்றடித்தது. இதனால் ஆடை முன்னிலுமுறுதியாய் அவன் முதுகைப்பற்றிக் கொண்டது. பின்பு சூரியன் தன் உஷ்ணமான கிரணங்களா லக்கனவானை வாட்ட அவன் வெயிலாற் சிறிது களைப்புற்று ஆடையொடு தான்புக்கிருந்த மெய்ப்பையையும் களைந்தெறிந்தான். அதுகண்ட வாயு சூரியனே வெற்றி பெற்றதாக வொப்புக்கொண்டார்."

மனிதரைப் பின்னிருந்தோட்டுவதனினும் முன்னிருந்து நடத்துதலெளிதென்றும் எவ்வாற்றானும் கட்டாயப்படுத்துவதனினும் வழிகாட்டல்மிகவும் நன்றென்றும் எஞ்ஞான்றும் மனத்தில் வைத்துக்கொள்வீர்.

> "வேண்டுந வற்றை விரும்பிப் பெறுவுழி
> யாண்டு மிளநகை யெய்தலே நன்று
> வாளின் முனையினாற் போழுவ தன்று."

நம்முடன் பழகும் பலரும் நம்மிடத்து நம்பிக்கை கொள்ளவும் அங்ஙனம் நம்புதற்குத் தகவுடையோமாகவும் நாம் முயலல்வேண்டும். உண்

மையினும் நன்னடக்கையே பலரது செல்வாக்கினுக்குக் 'காரணமாயிருக்கின்றது. உயர்ந்த உத்தியோக மெதுவுமின்றி ஆச்சரியமான செல்வாக்குடைய பிரான்ஸிஸ் ஹார்னர் என்பவரைப்பற்றி அவரது முகத்திற் பத்துக்கட்டளைசளும் பொறிக்கப்பட்டன என்று சிட்னி ஸ்மீத் கூறுவது வழக்கம்.

நேர்மையோடும் அறிவொடும் நும்மாலியன்றவளவு பிறரது விருப்பத்தின் வண்ணம்நடக்க முயலுமின்; ஆனால் 'அன்'றென மறுத்தற்கஞ்சன்மின்.

இன்புடன் 'ஆ' மென்றெவ்வொருவரும் கூறுவிடினும் எவரும் 'ஆம்' எனவாளா கூறுதலியலும்; ஆனால் 'இல்லை' யெனக்கூறுதல் அதனினும் வருத்தமானது. அவ்வாறுகூற முடியாது அழிவுற்றிருக்கின்றோர் பலர்.

சிற்றசியாவின் குடிகள் 'இல்'லெனுமசையைக் கூறவல்லரல்லாமையினாலேயே அடிமைகளாயினரென்றும் வாழ்க்கை நடையில் 'இல்லை' யெனச் சொல்லுதல் அவசியமாயின் அதனை யகமலர்ச்சியொடு சொல்லுதல் சிறிதும் அவசியத்திற் குறைந்ததன் றென்றும் ப்லூர்டார்க் என்பார் கூறுகின்றார். ஒரு தொழில்பற்றி நம்முடன் சம்பந்தப்பட்டவ ரொவ்வொருவரும் நம்மொடு தொழில்செய்த லின்பமே யன்றித் துன்பமன்றென்றெண்ணி மறுபடியும் நம்மிடத்து வரவிரும்ப நாம் முயலவேண்டும். தொழில் அநேகர் எண்ணுவதினு மதிகமாய் மனவிருப்பங்களைச் சார்ந்துளது. ஒவ்வொருவரு மன்புடனும் மரியாதையுடனும் நடத்தப்பட விரும்புகின்றனர். நூற்றுக்கு அரைவீத மெய்தும் பொருள்வருவாயைப் பார்க்கிலும் நன்றாய்க் கபடமற்ற இனிய நடை ஒருகாரியத்தை முடிக்கும்.

பெரும்பாலும் ஒருவன் தான் விரும்பினால் தன்னையே யின்பப்படுத்திக் கொள்ளலாம். 'இன்புறுத்த விரும்புவதே அதனைச்செய்து முடிப்பதிற் பாதி வேலையாயினுமாகின்றது. ஆனாலங்ஙனம் செய்ய விருப்பமற்றவ ரெவரும் பிறரை யின்புறுத்தார். இப்பெரும் பேற்றை யிளமையி லடையாவிடிற் பிற்காலத்தில் மிக வதிகவருத்தமாய்க் காண்பீர். பலர் தம் உயர்ந்ததிறமையினா லன்றித் தந்நன்னடக்கையினாலேயே வெளிப்படையாய் வாழ்க்கையின்கண் வென்றி பெற்றுளர். ஆனால் நன்மனமும் பட்சமான வெண்ணங்களு முள்ளதக்கோருட்பலர் தம் முரட்டுத்தனத்தினாலேயே பலரை விரோதிகளாக்கிக் கொள்கின்றனர். மேலும் பிறரை யின்புறுத்தும் வன்மையே ஓரின்பமாம். இதன்கண் முயன்றால் நும்முயற்சி பாழ்போகாது.

சாக்கிரதையாயு மமைதியாயு மிருமின். அன்புள்ள நெஞ்சம்போலமைதியுள்ள மனமும் அவசியம். உறுதியுமமைதியும், ஆபத்தும் வருத்தமுமுள்ள காலங்களில் உம்மைப் பத்திரமாய்க் காப்பாற்றுவனவேயன்றி எந்த விஷயங்களிலும் மதிக்க முடியாப் பயனுடைய துணைகளுமாம்.

உம்மினும் புத்தியிற் சிறியோரைக் காணுழி யவரை யவமதிக்க உமக்குரிமை யாதுமில்லை. பெருநிதியினும் பேரறிவைச் சுதந்தரமாய்ப் பெறுவது மிகவுமேதக்கதன்று. இரண்டிலும் நேரிய உபயோகத்தினாற்றான் சீர்த்தியெய்துகின்றது. மேலும் பலர் புறத்திற் றோன்றுவதைப் பார்க்கிலும் உண்மையில் அதிக ஞானவான்களா யிருக்கின்றார்கள்.

மனிதரினும் நூல்களைப் படித்தல் மிகவெளிதாம். மக்களியல்பை யறிவதிற் கண்கள் பேருதவி செய்கின்றன. கண்ணென்றும் நா பிறிதொன்றுஞ் சொல்வுழி அநுபவசாலிகள் முன்னதையே நம்புவார்கள். மிக்க நயவு வேண்டிய உத்தியோகங்களை நம்பன்மின். மனிதர் மனிதரொடும் மகளிர் மகளிரொடும் முதற் பார்வையிலேயே நேசங்கொள்ளார். ஒத்துநோக்குமிடத்துப் பிறனொருவன் நம்மை மறுத்து அதிகமாய் வாக்களித்தால் அதை முற்றும் நம்புதல் கூடாது. அவன் உண்மையற்றவ னாகாவிடினும் தானெண்ணுவதனினும் ஒருவேளை யதிகமாய்ச் சொல்லுவானல்லது அவனுக்கு நம்மாலாகவேண்டிய தேதேனுமிருக்கும். ஆகையா லொருவன் றன்னைப்புறத்தில் நேசனாகக் காட்டிக்கொண்டால் அதுகாரணம் பற்றி யவனகத்திலும் நேசனென நம்பன்மின். அற்பகாரணத்தா லவனையும் பகைவனெனக் கருதவு மொழிதிர்.

நாம் பகுத்தறிவும் ஞானமு முடையோமெனக் கூறுவதனால் நம்மையே புகழ்ந்து கொள்ளுகின்றோம். ஆனால் மக்களெஞ்ஞான்றும் தத்தம் பகுத்தறிவின்வழிச் செல்கின்றார் என்றெண்ணுதல் பிழையே. நாம் அற்புதமும் முன்பின் மலைவுமுள்ள பிராணிகள். எத்துணை யறிவின்வழிச் செல்கின்றோமோ அத்துணை ஒருகால் இன்னும் அதிகமாய்த்திரிபுணர்ச்சியும் கோபமுமாகிய இவற்றின்வழிச் செல்கின்றோம். நாம் பிறரொடு வாதித்து அவரைத் திருத்தியடையச் செய்தலின்றி அவரது தயவைச்சம்பாதித்து நம்பக்கஞ் சேர்த்துக்கொள்கின்றோ மென்பதே போந்தபயனாயிற்று. மேலு மிவ்வியல்பு தனித்தனி மாந்தர்க்குப் பொருந்துவதெனினும் மக்கள் குழாங்கட்கு மிகவும் பொருந்துகின்றது.

வாதமெப்பொழுதுஞ் சிறிதபாயகரமானது. அஃதடிக்கடி விரோதமும் விபரீதமு முண்டாக்குகின்றது. நீவிர் வாதத்தில் வெற்றிபெறலாம். ஆனால் நண்பனை யிழப்பீர். அஃதொரு நஷ்டமே. நீயிர் அவசியமாய் விவாதம் செய்ய வேண்டியிருந்தால் நும்மாலியன்றவளவு ஒத்துக்கொண்டு ஏதோ ஒரு விஷயம் கவனிக்கப்பட்டிலதென வெடுத்துக்காட்ட முயலுமின். வாதத்திலெப்பொழுது தாம் தோற்றனரென்பதை யறிந்தோரைக்காண்டல் மிகவரிதாம். அன்றியுமொருவன் வாதத்திலடிபட்டால் அது நியாயமேயெனத்திருத்தி யடைவானென்பது போதாது. உண்மையாகவே வாதத்தினா லொருவனைத் திருத்தியடையச்செய்ய முயலுதல் பயனற்றதென்று சொல்வது குற்றமாகாது. நுந்தம் விவாத விஷயங்களைத் தெளிவாகவும் சுரு

க்கமாகவும் சொல்லிப்பிறனது கோட்பாடுகளையே அவன் ஐயுறச் செய்தால் நீவிர் எதிர்பார்க்கக் கூடியனவெல்லாம் நடந்துவிட்டன. அஃதே நாமடைந்த முதற்படியாகின்றது.

தனித்து நோக்குழிச் சம்பாஷணையு மொருவித வித்தையாம். "டேகார்டே, சர்ஐசக்நியூடன், இவர்களினும் எக்காலாட்டலைவனும் அதிக நன்மை வாய்ந்த நண்பனுவா" னென்று செஸ்டர்பீல்டு பிரபு கூறியது உசிதமன்று யினும் பேசுதற்கு அதிக சரக்குள்ளோர் ஒருகாலும் சிறந்த நாவலராகார்.

நன்ருப்ப்பேசுதற்கு வேண்டிய வருத்தம் நன்ருப்க் கவனிப்பதற்கு வேண்டுமென்று யான் கூறேன். ஆனல் நிச்சயமாகவே அஃதொருவாற்ருனுமெளிதன்று. சற்றேறக்குறைய முன்னதைப்போலவே முக்கியமானது தான். நீர் கேட்பனவற்றை நுண்ணிய ஆராய்ச்சியுடையோன் போலாதல் நியாயாதிபதிபோலாதல் கேளன்மின். ஆனல்நும் அபிப்பிராயத்தை வெளியிடா தடக்கிப் பேசுவோனது மனேவிகாரங்களில் நுழைந்தறிய முயலுமின். நீர் அன்பும் அருளுமுள்ளீராயிற் பலரும் உமது புத்திமதியை நாடுவார், அதனுலுமக்கும் பிறருக்கும் கவலையும் வருத்தமுமுற்ற காலை உதவிசெய்து சுகம் விளைப்போராக இருத்தல்பற்றி ஒருவிதத் திருத்தி யுண்டாகும். நும் மினமையிலெவரும் நும்மை யதிகமாய்க் கவனிப்பாரென் றெண்ணன்மின், இருமின், கேண்மின், நாற்புறமுங் காண்மின். அருகிலுள்ளோர் விளையாட்டின் சுவையைப் பெரிதும் நுகர்கின்றனர் என்றொரு பழமொழியுண்டு. பிறரால் நீர் கவனிக்கப்படா திருக்கும் போழ்தே நிகழும் விஷயங்களை அவரினுமதிகமாகக் குறித்துணராவிடினும் அவரைப்போலவ்ாயினுங் குறித்துணரலாம். அஃதேயநேகமாய்ப் பிறருக்குத் தன்னை மறைக்குமையிட்டது போலாம்.

பலருக்கு ஆராய்தல் வருத்தமான காரியமாயிருத்தலின் அதனிக்கத்தின் பொருட்டு அடிக்கடி உம்மை நீர் மதிக்கின்றபடியே தாமும் மதிக்கின்ருர்.

நீயிரே நுமக்குப் பகைவர் படைத்துக்கொள்ளாதீர்; அதனினுந் தீய காரியம் வேறொன்றுமிலது. "மூடனிடம் அவன் மூடத்தனத்திற் கேற்றபடி பேசன்மின்; ஏனெனில் நீரும் மூடராக மதிக்கப்படுவீர்." குளிர்தங் விடை கோபத்தை நீக்குமென்பதை மறவாதீர்; ஆனற் கோபமான மறுமொழியும் இகழ்ச்சிக்கு மூடத்தனத்தில் நிகராகாது. பதின்மரிலொன்பதின்மர் வைதாலு மடித்தாலும் பொறுப்பார். ஆனற் பிறரால் நகையாடப் பெறுதலைப் பொருர். பிறரால் நகையாடப்பெறுதலைத் தவிர்த்துப் பெரும் பாலும் மற்றவை யனைத்தினையு மெளிதில் மறப்பார்.

"தீயனுற் சுட்டபுண் ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு"

என்ற பொய்யில்புலவன் பொருளுரையும் ஒருவாற்ரு னீண்டேற் புடைத்தாதல் காண்க.

ஏமாந்தமையே தான் பிறர்க்குப் புலனுவதினும் அதிக இனிமையுடையதாம். அதன்ஸ் நகரத்தனுகிய ட்ராகிலஸ் என்பான் பைத்தியங்கொண்டு பிரியஸ் பட்டினத்திலுள்ள நாவாய்களனைத்துந் தனவெனக் கருதி யிருந்தகாலை கிரீடோ என்பானுற்பைத்தியம் நீக்கப்பட்டபோது அவற்றைத் தம்மிடத்தினின்றும் யாரோ கொள்ளை கொண்டாரென்று மிகவும் வெறுத்து முறையிட்டுக்கொண்டான். "பரிகாசத்திற் காயினு மொருநண்பனை யிழத்தல் மூடத்தனமாம்; கவலையின்றி யிருபக்கத்திலும் சேரானைப் பிறர் மனத்திற் றைக்க வல்ல ஒரு நயங்கூர் விடையின் பொருட்டுப் பகைவனுக்கிக் கொள்வது அதனினும் அறிவின்மையிற் குன்ருதது" என்று செஸ்டர் பீல்டு பிரபு கூறுகின்ருர்.

நிந்திப்போ னொருவனை யைபப்படவாதல் பிலுங்கர் தந்திர மென்னு நூலில் ஸ்க்ராப் என்பான் 'அவர்கள் குலுங்கச்சிரித்ததனுல் என்னைப்பற்றியே பேசினுர்கள்' என்று கூறினுற்போல நம்மைத்தான் இகழ்ந்து நகைக்கிறதாக வெண்ணவாதல் சித்தராயிராதீர். ஆனுல் எவராயினும் உம்மை நகையாடினு லதற்குள்ளாகாதீர். நீருமவருடன் மனமொப்பிச் சேரக்கூடுமாகில் அவர் காரியத்தைத் தலைகீழாக்கிவிட்டு நஷ்டமடையாது லாபமடைவீர். தான் பிறரால் நகையுண்டகாலத்து அந்நகையின் சுவை காண்பானை யெல்லோரும் விரும்பாநிற்பார். அதுவும் நியாயமே; ஏனெனில் அது நல்லறிவும் நல்லியல்பு மவனிட முளவெனக் காட்டுகின்றது. நீயிரே-நும்மை நகையாடிற் பிறரும்மை நகையாடார்.

உம்மபிப்பிராயங்களிற் றைரியமாயிருமின். சிலவேளைகளி னகைபாடப் பெறுதலை யெதிர்பார்க்கவேண்டும். அப்பொழுது அஃதொரு தீங்கும் விளைக்காது. நீருண்மையாக வுள்ளபடி தோன்றுதலில் நகையாடத்தக்க தொன்றுமில்லை. ஆனுல், நீர் இல்லாதபடி நடிப்பதில் நகையாடற்கு வேண்டிய வளவுளது. ஏதோ ஒரு பொய்யான குறைபாட்டிற்காக மக்களடிக்கடி தம்மையே நொந்துகொள்ளுகின்ருர், கோபமுறுகின்ருர், பிறரொடு விரோதஞ்செய்து கொள்ளுகின்ருர்.

கபடமற்றும் ஒற்கமுற்று மிருமின். உம்மைப்பற்றியே யதிகமாய்ப் பேசிக்கொள்ளன்மின். உம்மைப்பற்றியாதல், உமக்காகவாதல், உமக்கெதிராகவாதல் பேசுதல் தவிர்க. ஆனுற் பிறர் தம்மைப்பற்றி வேண்டியமட்டும் பேசிக்கொள்ளட்டும். அவ்வாறு செய்தலை விரும்புவதனுற்ரு னங்ஙனஞ் செய்கின்ருர்கள். அவர் சொல்வனவற்றிற்குக் காதுகொடுத்தால் உம்மைப்பற்றியின்னும் நல்லெண்ணங் கொள்வார், எவ்வாற்ருனும்உங் கடமையாயிருந்தாலன்றி நீர் ஒரு மனிதன் புல்லறிவினனென்ருதல் பொறி

யறையென்றுதல் எண்ணுவதை அவனுக்குக் காட்டன்மின்.' நீர் அவ்வாறு செய்தால் அவன் முறையீட்டினுக்குத் தக்க காரணமுளது. நீவிரும் உம் முடிவுகோளிற் பிழைபோகலாம். உம்மைப்பற்றியும் அதே எண்ணம்-அது வும் சிறிது நியாயத்துடன் - அவனுங்கொள்வான்.

பர்க் என்பார் ஒரு காலத்தில் ஒரு குலத்தை ஒருங்கே தான் பழிக்க கூடாதென்றுர். ஒரு வகுப்பினரையாதல் ஒரு தொழிலினரையாதல் எதிர்ப் பது மிகவும் அபிப்பிராயமும் மடத்தனமுமாகும். தனித்தனி மனிதரடிக்கடி பொறுத்து மறப்பார். ஆனல் மக்கள்குழாம் எப்பொழுது மங்ஙனஞ் செய் கின்றதில்லை. மேலுந்தனித்தனி மனிதன் ஓரவமதிப்பினும் தீங்கையெளி தாய்ப் பொறுப்பான். அசங்கதமாகத் தோற்றுவதனினும் வேறென்றும் மனத்தைப் புண்படுத்துவதில்லை. மனிதரைக் கோபமூட்டுவதனலும் பரிகா சம் செய்வதனலும் உம் காரியம் கைகூடாது.

கீதையென்னும் புலவர்பெருமான் எக்கர்மானேடுசெய்த சம்பாஷணை களில் ஆங்கிலரைத் துதித்தார். ஓரவையில் அவர் பிரவேசிக்குமாறும் அங்கே நடந்து கொள்ளுமாறும் எவ்விடத்து மவரே யெசமானர்க ளென்றும் உலக முழுதும் அவரதேயென்றும் ஒருவன் எண்ணுமளவு நிச்சயமாகவும் அமைதி யாகவும் இருக்கின்றனவாக அவர் கூறினர். எக்கர் மான் என்பவர் நிச்சய மாகவே ஆங்கிலர் சேர்மானிய இளைஞரினும் புத்தியிலாதல் கல்வியிலாதல் நன்மனத்திலாதல் மேலானவர்களல்லர் என்றுர். கீதை விவாதவிஷயம் அஃ தன்று. அவர்தம் மேன்மை இத்தகைய விஷயங்களிலாதல், அவர்கள் பி றப்பு அதிர்ஷ்டங்களிலாதல் இல்லை. இயற்கையாய் அவர் இருந்தபடியே இருத்தற்கு வேண்டிய தைரியத்திற்றன் அவர் மேன்மையுளது. அவர் குறை யென்பதே அவர் அறியார். அவர் நிரம்பிய மனிதர். சில வேளைகளில் முழுமக்கள் என்பதையும் ஒத்துக்கொள்ளுகின்றேன். ஆனல் அது சிறிதே யெனினும் யாம் அனைவரும் கவனிக்கவேண்டியதே.

எத்தொழிலிலும் பொறுமையா யிருமின். பலர் தம் வேண்டுகோட்குப் பிறர் இணங்குதலினும் தம் சரித்திரத்தைக் கேட்கவேண்டு மென்று விரும்பு வார். அதை யெதிர்ப்போருட் பலர் களைத்தொழிக்தார். எவற்றினும் மேலா கச் சினங்கொள்ளன்மின்; கொண்டாலும் வாயடங்கி வெளிக்காட்டாதீர். குளிர்ந்தவிடை கோபத்தை நீக்கும்; ஆனல் அன்பமொழி கோபமூட்டு மாதலின் சினத்தின் நீங்குமின். செற்றம் செய்யாதீர். எவ்வாற்றனும் தீங்கு செய்ய விரும்பாதீர்.

வேண்டா இடங்களிற்சென்று தலையிடாதீர்; அதைத் தவிர்த்துப் போ திய இடம் யாங்கணு முளது. ஜேம்ஸ் அரசன் ஈயினிடம்; 'யான் மூன்று இராச்சியங்கள் உடையேன் அல்லேனே? அவ்வாருக அவற்றைவிட்டு என் கண்ணிற்றனேபறக்க வேண்டும்?' என்று கூறினர்.

சிலர் தவறு பேசுவதிலும் நொந்த புண்ணிற் சோலிட்டாற் போல விசனகரமான விஷயங்களை நினைப்பூட்டுவனவற்றைப் பற்றிப் பேசுவதிலும் அபிப்பிராயங்களில் வேறுபாடு விளைப்பதிலும் சாமர்த்திய முடையரா யிருக்கின்றார்கள்.

மக்களைப்பற்றிய வறிவினு மிக்க பயனுள்ளதொருநூலுமில்லை. அறிவுடன் நியாயந் தீர்க்க வல்லராயிருக்க வேண்டுமென்பது மிகவு மின்றியமையாதது. எவரை நம்பலாம் எவரை நம்பக்கூடாதென்பதேயன்றி யவரை யெத்துணை யெவ்விஷயத்தில் நம்பலாமென்பதும் மிக முக்கியமானது. இஃதொருவாற்று மெளிதன்று. உம்முடனின்றும் உமக்குக் கீழாக நின்றும் வேலை செய்வோரை நன்றாய்த் தெரிந்தெடுத்தலும் சதுரனைச் சதுரமான விடத்திலும் விருத்தனை விருத்தமான விடத்திலும் வைப்பதும் சாலவு மின்றியமையாதன.

ஒருவன் மீது ஐயங்கொள்ளில் அவற்குத்தொழிலிடாதீர். ஒருவற்குத் தொழிலிடில் அவன்மீது ஐயங் கொள்ளாதீர்.

பெரும்பாலும் நம்பாதாரினும் நம்புவோர் நேர்வழியிலிருக்கின்றார்கள்.

நம்பிக்கை பூரணமாயிருத்தல் வேண்டுமே யன்றிக் குருட்டுத்தனமா யிருத்தல் வேண்டுவதில்லை. 'முழுது நம்புமின் அல்லது நம்பவேநம்பாதீர்' என்ற விவியன் வேண்டுகோட்கு அறிவின்றி யிணங்கினமையின் விவேகியாயினும் மேர்லின் தன்னுயிரை யிழந்தான்.

எப்பொழுது மாராய்ச்சியுடையோரா யிருக்கவேண்டின் ஒவ்வொருவரும் எப்பொழுதும் சொந்த யோசனைப்படியே செய்க. உம்மிஷ்டத்தை நீரே செய்யாவிடில் அதன்படி பிறர் நடப்பாரென் றெதிர்பார்த்த லொண்ணாது. "ஞானவானுக்கு வாய்மனத்திலே; அறிவிலானுக்கு மனம் வாயிலே, ஏனெனில் அவன் எண்ணுவது அறிவது எல்லாவற்றையும் சொல்லி விடுகின்றான்."

உமக்களிக்கப்பட்டுள வறிவைப் பயன்படுத்துமின். உம்பகுத்தறிவையு மனுசரித்துக் கொண்மின். உம்பகுத்தறிவு தவறு மியல்பில தன்றாயினும் நீர் பிழைசெய்தல் சிறுபான்மைத்தாகும்.

பேச்சு வெள்ளிபோன்றது அல்லது வெள்ளிபோலிருக்க வேண்டும்; ஆனால் மௌனம் பொன்போன்றது.

பேசுதற்கு விஷயமில்லாத காலையும் பேச்சிலாசையுள்ளதனாலேயே பலர் பேசுகின்றார்கள். அது நாவின் றொழிலாயிருப்பதனினும் மனத்தின் றொழிலா யிருத்தலே நலம். வீணாகப்பேசுந்தன்மை அஃதாவது பேசவேண்டுமே யென்பதற்காகவே பேசுவதிலாசை வென்றியினழிவிற்குக் காரணமாயுளது. மக்கள் பேச்சின் வெறியினால் நேராகவும் வேகமாகவுந் தள்ளுண்டு தாம் கருதியனவற்றிற்கு முற்றிலும் மறுதலைப்பட்ட விஷயங்களைச் சொல்

லிப் பின்னர் அவ்வாறு பேசியிருத்தல் கூடாதென் றெண்ணுகின்றனர்; அல்லது நாவிற்குத் தொழிலிடுதலைத் தவிர்த்து வேறொரு கருத்து மின்றித் தகவற்ற விஷயத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள்.

இவ்வாறு பேச்சிலடக்கப்படாத கருத்தின்மையும் அமபரிமிதமுமே வாழ்க்கையின்கண் அளவற்ற கேட்டிற்கும் அமழிவிற்குங் காரணமாயுள; அது சுட்டிச் சொல்லப்பட்டவர்களுக்குச் சினமூட்டுகின்றது; ஏனையோரிடத்துக் கலசத்தையும் வேற்றுமையையும் விதைக்கின்றது. வாளாவிடிற் றேமேமறையத்தக்க அற்பமான வருத்தங்களையும் குற்றங்களையும் கொளுத்துகின்றது.

டேமரேடஸ் என்பான் ஓரவையிற் பேசாதிருந்ததற்குக்காரணம் மொழியின்மையோ வறிவின்மையோ வென்று வினவப்பட்டபோது 'ஒரு மூடன் மௌனமா யிரான்' என்று விடைபகர்ந்ததாக ப்ளூடார்க் கூறுகின்றார்.

"பரபரப்பாய்ப் பேசுவோனைக் காண்பீரா? அவனினும் பேதையிடமிருந்து அதிகமா யெதிர்பார்க்கலாம்" என்றார் சாலனும்.

நும்மேன்மையைக் காட்ட முயலாதீர். நம்மிற் சிறியரெனவுணரச் செய்வதினும் மனிதரை யதிகமாய்க் கோபமூட்டுவது இல்லை.

உம்முறையே சரியெனச் சாதியாதீர். எவ்வளவு நிச்சயமா யிருப்பினும் தவறு யிருக்கலாம். நமது ஞாபகசக்தி நாமாச்சரியப்படத்தக்கவளவு நம்மையே யேமாற்றுகின்றது. காதுங் கண்ணுஞ் சில சமயங்களில் மோசம் போகின்றன. நம்மனக் கோட்டங்கள் அன்பினொடும் ஆதரிக்கப்பட்டாலும் வலியுள்ள அடிப்படை யில்லாதிருக்கலாம். மேலும் நேரியனா யிருந்தாலும் அதிக நிச்சயம் பாராட்டாவிடில் ஒன்றும் இழக்கமாட்டீர்.

இன்னும் தொழில் செய்வதிலும் அதிக நிச்சயமாயிராதீர். ஓரமயத்தையுந் தவறவிடாதீர். 'கைக்கெட்டினது வாய்க்கெட்டாது.'

காத்திருக்கும் வழியறிவாருக்கு எல்லாங் கைகூடுமெனக் கூறப்பட்டுளது. தருணம் வாய்த்தபோது தப்பாது பிடித்துக்கொண்மின்.

"எப்பொருளுந் தாமாக வெய்துமி வேண்டார்கட்
சப்பொள்வேண்டினுமெய் தா."

ஓரமயத்தைத் தவறவிட்டால் மற்றோரமயம் வாராதே யிருக்கலாம்.

"மக்கடங் தொழிலெனு மாபெருங் கடலுண்
மிக்குள தோரலை வெள்ளத் தோடெழிற்
செல்வக் கரையிற் சேர்த்திடு மதுதான்;
ஒல்வகை விரும்பி னுவருயிர் வாழிக்கைக்
கடற்செல வெல்லாம் கையறு துன்பமாந்
தடப்புளி னத்திற் றடையுண் டலைவர்:
இத்தகைப் பெருங்கட லினின்மிதக் கின்றோம்.

ஒத்த பேரலை யொன்று வந்துழி
கைக்கொண் டெழுதும்; அதான்று:
மெய்ப்பய னிழத்தன் மிகவுந் திண்ணமே"

கவலையோடிருமின்; ஆனால் அளவுக்கு மிஞ்சிய கவலையொழிக. 'என் றுந்சவறு ஞென்றுஞ் செய்யான்'

எப்பொழுதுந் தூய உடை உடுமின். நாமுடுக்க வேண்டுவதின்றியமை யாததாதலின் அது மிக நன்றாயி யிராவிடினும் நன்றாகச்செய்து கொள்ள வேண்டும். பெரும்பணம் பெற்றதும் உடுப்புழி யதிகநேரம் பிடிப்பதுமான உடைவேண்டாம். ஆனால் நற்றுணியாகவே யிருத்தல் வேண்டும்; தற்காலத் திற் பலர் மக்களை மிகுதியுமுடையினுன் மதித்தல் விந்தையாயிருக்கின்றது. நீர் சந்திப்பவருட் பலரை யுடையினுன் மதிக்கின்றீர். இன்னும் பலர் உம்மை யும் தோற்றத்தினுலேயே மதிக்கின்றார். உம்மைப் பார்ப்பவர் நூற்றுவரிருந் தால் உம்மை யறிவோன் ஒருவனே யுளன்; மேலும் நீர் உம்மைப்பற்றியே சிரற்று மசாக்கிரதையாயு மிருந்தால் மற்ற விஷயங்களிலு மவ்வாறே யிரு ப்பீ ரென்று திட்டமாய்ச் சொல்லத்தக்க தன்றாயினும் ஒருவாறு சொல்ல லாம்.

மக்கள் குழாத்திலிருப்புழி நன்மையுமினிமையும்வாய்ந்தநடக்கையுடை யோரை யோர்ந்துணர்மின் " நன்னடையே மனிதனை மனிதனுக்குகின்றது" என்றெரு பழமொழி சிறிதுயர்வு நவிற்சியாகக் கூறினும் மிக்க வுண்மை பொதிந்துளதேயாம். "அழகிய வடிவமே யனைவோரையுந் தன் வயப்படுத் தும்" " யாவர்க்கு நன்னடக்கை சிறிது. சிலர்க்கு நன்னடக்கையே யாவும்" " மதிப்புங் கல்வியறிவும் தோன்றியநட்பை உறுதிப் படுத்துவனவாயினும் பிறர்மனங் கவர்வனவல்ல; நடையுடை பாவனைகளினுற் கண்களைக் கவர்மின்; அழகு மினிமையும் வாய்ந்த சொற்களாற் காதுக்கின்பமூட்டுமின். உடனே அவருளம் மலர்ந்து உம்மை யேற்றுக் கொள்ளுமென்று நிச்சயமாய் அன்றி யநேகமாய்ச் சொல்லலாம்." கண்ணுங்காது மெல்லோருக்குமுள. ஆனுற் கூரியவாராய்ச்சி சிலரிடமே யுளது; முன்கூறியபடி உலகமொரு நாடகசாலை; நாமனைவரும் நடர்கள். ஓராட்டத்தின் கண் வென்றி பெறுதல் எவ்வளவு அஃதாடப்பட்ட விதத்திற் சார்ந்துள தென்பதை யாவருமறிவார்.

செஸ்டர்பீல்டு பிரபு தன் மகனைப்பற்றிப் பேசுமிடத்து இவ்வாறு கூறு கின்றார்: "தெரிந்த விடமெல்லாமவன் மாட்டன்புடையனவாகச் சொல்லு கின்றார். அது பற்றி யான் பெரிதும் மகிழ்கின்றேன். ஆயினுமவனைத் தெரியு முன்னரே அவனிடத்து விருப்பும் பின்னர் அன்பும் உடையராகவேண்டு மென்று விழைகின்றேன். நீரவற்றைப் பயனற்றன வென நினைப்பீரேல் என்றும் மக்களியல்பை யறியாதவராவீர். அவ்விஷயங்களில் எவ்வளவு கவ னஞ் செலுத்தினும் போதா. அவைகளே யென்றும் மனத்தின்கண் அன்பு

நீர் பாய்ச்சுகின்றன. அவ்வற்பு நீரிடைத்தோன்றும் குமிழியே பெரும் பாலும் அறிவாம்."

நாமகள் போலவே பூமகளும் மக்கட்கு வாழ்க்கையிற் கருணைபுரிகின் றாள். ஒருவன்திருடினாலுங் குற்றமன்று. மற்றொருவன் வேலியை யெட்டிப் பார்த்தாலுங் குற்றமே யாம் ஒருவன் இன்பமனத்தொடும் மற்றொருவன் துன்பமனத்தொடும் செய்வாராதலின். 'நாவன்மையும் கலை நலமு நல்லெழி ற்றுணையின்றி யொளிர்வனவல்லம்' என்றார் ஹாரஸனும்.

சருக்கை - வரதாசாரியன்.

---

# தேசாபிமானி.

## அத்தியாயம்.—II.

இப்படியாக அநேக வருஷங்கள் சென்றன. சிறுவன் இறந்ததை மூத் தவன் கீர்த்திப் பிரதாபத்தினாற் பெற்றவர்களும் மறந்தார்கள். ஆனால் அம் மூத்தவனோ அதை மறக்கவுமில்லை; அந்தக் கொலையாளிகளை மன்னிக்கவு மில்லை. அந்தக் கொலை நடந்ததற்கும் தான் ராஜ்யாதிபத்தியம் அடைந்ததற் கும், கொண்ட வெண்ணம் வீண்களுவா யிருந்ததற்கும் அது கைகூடியதற் கும் இடையிலுள்ள மத்தியகாலமே—அந்தக் காலத்தில் ரோம் இருந்த நிலைமையைக் கூறத் தகுந்தபருவம்.

ரோமிற் பற்பல ஜாதியார் நாளாவட்டத்திற் சேர்ந்து மற்றவர்களோடு கலந்தும் ரோமர் தங்கள் முன்னோர் லோகசக்கிரவர்த்திகளா யிருந்ததை மறந்தவரல்லர். ரோம் குடியரசா யிருந்த காலத்திற் குடிகளிடத்திலிருந்த நன்னடக்கை யெல்லாம் போய் அவர்களிடத்துள்ள அடங்காத்தனமாத்திர மிருந்தது. இவ்வகைக் குடிகளிடத்திற் பிரபுக்களும் கொடுங்கோலராயிராது கொள்ளைக்காரராயினர். ஐரோப்பா முழுவதும் சர்வாதிகாரம்வகித்த போப் போ, தன்நாட்டில் மதிப்பின்றித் தன் தேகமும் தனக்குச் சுவாதீனமில் லாமற் சிறையிலிருப்பவன் போன்றனன்.

பிரஞ்சுக்காரனாகிய ஐந்தாவது க்ளிமாண்டு இந்த உபத்திரவம் சஹிக்க மாட்டாது தன் தேசத்தில் அவிக்கினன் என்னுமிடத்திற் போய்ச் சேர்ந் தான். பேருக்காவது இருந்த போப்பும் நகரைவிட்டுப் போய்விடவே பிர புக்களை ஒருவரு மடக்குவாரிலர். இடலியிலுள்ள வெனிஸ், மிலன், ப்ளா ரன்சு, என்னும் மற்ற நகரங்களெல்லாம் நாகரீகமடைந்து வெகு சிறப்படை ய ரோம் மிக்க ஈனஸ்திதிக்கு வந்து கொண்டிருந்தது. நகரத்தின் 13 பாகத் திலும் ஒரு தலைவனைத் தெரிந்தெடுத்தார்கள். இவர்கள்தாம் நியாயாதிபதி கள். இந்தச் சபையாருக்குத்தாம் பேருக்கு எல்லா அதிகாரமும். ஒரு சமயம்

போப்பும் மற்றொரு சமயம் பிரபுக்களும் ஸெனேடர் என்ற ஒருவனை ஏற்பாடு செய்வார்கள். அவர் அதிகாரம் பெருக்கு வரம்பற்றிருந்தும் அவர் சிறிதும் சக்தியிலர். அவ்வாறு வரும் ஸெனெடரும் பிரபுக்களே. நியாயமென்பது சிறிதும் கிடையாது. கக்ஷியே பிரதானமா யிருந்தது.

இவ்வாறு கோட்டைகட்டிக்கொண்டு கூலிக்குப் பலத்த சைன்னியங்களை வைத்துக்கொண்டிருந்த பிரபுக்களில் மிக்கபலம் பெற்றவர் கோலன்னு, ஓர்ஸினி என்ற இருவர். இவர்களிற் கொலன்னு வம்சத்தார் சிறிது நாகரீகமுள்ளவர்கள்; என்றாலும் இருதிறத்தார்களும் ஒருவரோடொருவர் வெட்டி மடிவதே அவர்கள் தொழிலாயிருந்தது. இவ்விதக் கொடுங்கோலரது குரூரத்தைச் சகியாது குடிகளும் ஏங்கினர். சக்கிரவர்த்தியும் போப்பும் இங்கேயே யிருந்தால் இவ்வித அக்கிரமம்நடவாதே என்று மனநொந்தனர். போப் அவ்விடம் இல்லாததனாற் குடிகளுக்கு வருவாயுமில. போதாக் குறைக்குக் கொள்ளைக்காரர் உபத்திரவமும் அதிகமா யிருந்தது. அவ்வாறு வந்த கொள்ளைக்காரரில் வேர்னர் என்பவன் பெருங்கூட்டம் ஒன்று சேர்த்துக்கொள்ளையடிக்க ஆரம்பித்தான். திடீரென்று ஒரு கோட்டையைவளைப்பார்கள். இவர்களை எதிர்க்கச் சேனையில்லாதசனல் உள்ளேயிருப்பவர்கள்திரளான கப்பங்கட்டித் தப்புவார்கள். வேர்னநும் "ஈவிரக்கம் தெய்வம் இவற்றிற்குச் சத்துரு" என்ற பட்டப்பெயர் வகித்தான். சிறிது நாள் கழித்துத்தன் தேசமாகிய ஜர்மனிக்குப் போய்ச்சேர்ந்தான். அவனிடத்தி லிருந்தவர்களில் வால்டர் டி மாண்ட்ரில் என்பவன் போனவர்போக நின்றவர்களை ஒன்று சேர்த்துத் தன் வீரத்தாலும் புத்திக்கூர்மையாலும் தானே தலைவனாய்த் தன்னைக்காண்போர் எவரும் நடுங்கும்படி செய்துவந்தான். போப்பின் பிதிரார்ச்சித நாடுகளெல்லாம் சிறிது பிரபுக்களாற் கவரப்பட்டும் மற்றவை இக்கொள்ளைக் காரருக்கு இரையுமாயின. ஆகையாற் போப்பின் வரும்படி மிகக் குறைந்தது. போப்பின் பொக்கிஷம் நிறையவும் குடிகள் க்ஷேமப் படவும் ஆறவது களிமாண்டு ஒரு சூழ்ச்சி செய்யலாயினன்.

இதற்குச் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னால் எட்டாவது போனிபேஸ் என்பவர் சோறின்றிக் கிடந்து வருந்தும் ரோமர் சந்தோஷப் படவும் தம் பொக்கிஷம் நிரம்பவும் ஜூபிலீ பண்டிகை ஒன்று உண்டாக்கினன். ஜூபிலீப் பண்டிகைக்காலத்தில் ரோமாபுரியின் கோயிலைத் தரிசிப்பவர்களுக்குப் பாபவிமோசன மென்று பறையறைவித்தான். நாலா பக்கங்களிலுமிருந்து யாத்திரீகர் திரள் திரளாய் வந்தாகள். இருவர் குருக்கள், பொன்னை எண்ண முடியாது இரவும் பகலும் கை ஓயாது வாங்கிப் போட்டுக்கொண்டேயிருந்தார்கள். பின்னால் வந்த க்ளிமாண்டுக்கு நூறுவருஷத்துக் கொருதரம் இப்பண்டிகை வருவது நெடுங்காலமாயிருந்தது. ஆகையால் மோசே ஜூபிலி என்று 1350ஹு ஐம்பது வருடத்துக்கொன்று உண்டாக்கினன்.

நமது சரித்திரம் தொடங்குவதற்கும் இதற்கும் மூன்று வருடமுள. ரோமிற் கொள்ளையுங் குரூரமும் அதிகமாயிருந்ததனற் குடிகளுக்குப் பிரபுக்களிடத்தில் அதிக கோபமும் வெறுப்பு முண்டாயிருந்தன.

போப்பின் பிரதிநிதியாகிய ரேய்மாண்டு, யாத்திரீகர் வருதற்குப்பாதையைச் செப்பனிட்டுக் கொள்ளைக்காரர் பயமற்றிருக்கத் தன்னாலான வரையிற் சூழ்ச்சிதேடினன்.

நமது சரித்திரம் தொடங்குங்கால் ரோம் இவ்வித ஸ்திதியிலிருந்தது. பிரசித்தி பெற்ற பழைய பேர் இன்னும் மறையவில்லை. பேருக்கு அதுதான் லோக சக்கிரவர்த்தினி. ஏதாவது ஒரு தேசாபிமானி கிளம்பினல் அவன் எண்ணம் நிறைவேறும்போல் தோன்றிற்று.

## அத்தியாயம் III : குழப்பம்.

1347௵ ஏப்ரல்மாதத்தில் ஒருநாள் சாயங்காலம் பழையரோமும் புதியரோமுங்கூடும் மைதானவெளியில் ரோமிலுள்ள ஜனங்களெல்லாந் திரளாய்க்கூட்டங்கூடினர்கள். அன்றுகாலைதான் மார்டினே டி போர்டோ என்னும் பிரபுவின் பட்டாளங்கள் ஒரு தட்டான்வீட்டில் நுழைந்து அவன் வீட்டிலுள்ள சாமான்களையும் திரவியங்களையும் சூறையாடின. ஊர் முழுமையும் பிரபுக்களிடத்திற் கோபமும் பகைமையும் அதிகரித்தன.

"நான் ஒருநாளும் இக்கொடுங்கோன்மைக் குட்படேன்'' என்றான் ஒருவன்.

"நான்மாத்திரமோ''.

"நானும்மாட்டேன்''.

"சுவாமி ஆணை நானும்மாட்டேன்''

ஜனங்கள் ஒன்றுசேர்ந்து ஒர்ஸினேவின் அரண்மனைக்கு அதிககோபத்தோடு மேற்கூறியவாறு பேசிக்கொண்டுபோனதைக்கண்ட பிரபுச் சிறுவன் ஒருவன் அவர்களைநோக்கி, "என் சினேகிதர்களே, நீங்கள் உட்படமாட்டேனென்று கூறுங்கொடுமை யாது?'' என்று கேட்டான்.

உடனே இரண்டு மூன்றுபேர் "பிரபோ, தாங்கள் கொலன்னுவைச் சேர்ந்தவராதலின் எங்களை நடத்துவீர், எங்களுக்கு நியாயமும் கிடைக்கும்படிசெய்வீர்'' என்றார்கள்.

இதைக்கேட்டதும், "சொலன்னுவும் நியாயமுமா? இரண்டுக்கும் வெகு தூரமாயிற்றே, அதைவிடக் கடவுளுக்கு அங்கமுண்டென்று கூறலாமே", என்று செப்பி, ஒருபெரிய சம்மட்டியைச் சுழற்றிக்கொண்டு "ஹா, ஹா" வென்று வெகு இதழ்ச்சியாக நகைத்தான் இராக்ஷஸாகாரமுள்ள ஒருவன். "கொல்லு, கொல்லு அவனை, அவன் ஓர்ஸினி'' என்றார் பலர்; என்றாலும் அந்த ராக்ஷஸன்பேரில் ஒருவனாவது கைதூக்கவில்லை.

சிறிதுநேரஞ்சென்றதும் "அவன் கூறுவது உண்மைதான்" என்றுனொருவன்.

"ஆமாமப்பா, அவன்சொல்வதைக் கேட்போம், ஓர்ஸினோ கொடுங்கோலர்சாம், கோலன்னுவும் கொடுமையில் அவர்களுக்குத் தாழ்ந்தவர்களல்லர்" என்று தன் கத்தியையுருவிக்கொண்டே மொழிந்தான்மற்றொருவன்.

"ஏ துஷ்டா! நீ பொய்சொல்லுகிறாய்," என்றுசொல்லிக் கடைசியாகக் கூறியவனைநோக்கிச் சென்றான் பிரபுச்சிறுவனும். இதுகண்டதும் அவன் சிறிது விலகினான். பிரபுச்சிறுவனும் ராக்ஷஸாகாரமுள்ள கம்மாளனும் நேர் நின்றார்கள். தாங்கள் பிறந்ததுமுதற் கீழ்மக்களை அலட்சியம் செய்தே வழக்கப்பட்ட பிரபுக்களுக்கு இவ்விதசச்சரவுகள் புதியனவல்ல. அன்றியும் வெகுவாய்அவர்களை வெறுத்துநிந்தித்துக்கர்ச்சிக்கும் கும்பல்அவர்களைக்கண்டதும் சூரியனைக்கண்டபனிபோலக் குலைந்துவிடும். ஆனதுபற்றி எட்ரியனுகியபிரபுச்சிறுவனும் கம்மாளனது ராக்ஷஸாகாரத்தையும் அவன்கைகொண்டிருந்த ஆயுதத்தையும் சிறிது இலக்ஷியம் செய்யாது அவனை விலகச்சொன்னான். "ஓ நண்பர்களே! உங்கள் வீட்டுக்குப்போங்கள், ஓர்ஸினோவின் அக்கிரமச்செயல்களுக்கு நாங்கள் உடந்தையென்றுவது அவர்களுக்கும் எங்களுக்குமுண்டாகும் சச்சரவுகளில் எங்கள்நயத்தையே நாங்கள் பாராட்டுபவர்களென்றுவது எண்ணங்கொண்டீர்களானால் உங்களபிப்பிராயம் பிசகே. இது நான் உண்மையாகச்சொல்லுகிறேன். இந்தக் கத்தியை நான் உருவினது உங்களுக்காகவும் ரோமிலுள்ள அக்கிரமக்காரர்களுக்காகவும் ஓர்ஸினோவுக்கு எதிரியாகவுமே என்று நினையுங்கள்" என்றான் எட்ரியனும்.

"இவ்வாறே ஒவ்வொரு கொடுங்கோலருங் கூறுகின்றார்கள். அவர்களொருவரோடொருவர் சண்டைசெய்வதும் கோலன்னு வம்சத்தானொருவன் ஓர்ஸினோவைச்சேர்ந்த ரொட்டிக்காரன் கழுத்தை வெட்டுவதும் மற்றொருவன் ஓர்ஸினோ தையற்காரன்பெண்ணை யிழுப்பதும் எங்கள் நன்மைக்கும் ஜனங்கள் நன்மைக்கும் ரொட்டிக்காரர் தையற்காரர்கள் நன்மைக்குமல்லவோ!" என்று தன் சம்மட்டியை ஒரு கல்லின்மேலூன்றிக்கொண்டு மிக்க துணிவுடன் மொழிந்தான் கம்மாளனும்.

"ஏ தோழா, ஒரு கொலன்னு குற்றம்செய்வானேயாயின் அஃது அவனுடையதேயொழிய அவன் கட்சியைச்சேராது. நல்லகட்சியிலும் கெட்டவர்க ளிருக்கவுங்கூடும்" என்று துக்கத்துடன் கூறினான் எட்ரியனும்.

"ஆமாம், தலைமைமடத்துக்கே சரியானதுணைவரில்லை" என்று கொலன்னுவிடத்தில் மதகுருவான போப்புக்குண்டான அபிமானத்தைக்குறிப்பிட்டுச் சாதுரியமாக மொழிந்தான் கம்மாளனும்.

"ஆ! பெரிய தேவ தூஷணம், கொலன்னு! கொலன்னு!" என்று அக்கட்சியர் கூறினார்கள். "ஓர்ஸினோ, ஓர்ஸினோ" வென்றும் எதிர்ச்சப்தங்

கேட்டது. எல்லாருக்கும் மேலாகத் தன் ஆயுதத்தைச் சுழற்றிக்கொண்டு "மஹாஜனம்" என்றிரைச்சலிட்டான் கம்மாளனும்.

சிறிது நேரத்துக்கெல்லாம் ஒருவன் கொடுமையைச் சகியாது ஒன்று சேர்ந்த ஜனங்கள், பிரிந்து இருதிறத்தாராய்த் தங்கள் தங்கள் கட்சியிற் சேர்ந்தார்கள். ஓர்ஸினோவம்சத்தாருக்குப் புதிதாய்த்துணைவர் பலர் ஒத்தாசைக்குவந்தனர். கொலன்னு வம்சத்தார் ஒருபக்கமும் ஓர்ஸினோவம்சத்தார் மற்றொருபக்கமும் இந்த இரண்டுகட்சியிலும் சேராது "மஹாஜனம்" என்று இரைச்சலிட்ட வேறு சிலர் சண்டையிற்சேராது ஒதுங்கியிருக்க, அவர்கள் விசேஷமதிப்புவைத்துள்ள கம்மாளன், கொலன்னுவம்சத்தானின் கம்பீரத் தோற்றத்தைச் சகியாதோ, சண்டைசெய்யவேண்டுமென்னும் அவாவினால் தூண்டப்பட்டோ, சிறிதுமயங்கி ஓர்ஸினோகட்சியிற் சேரவும் அதுகண்டு அவர்களும் அந்தக்கட்சியிலேயே சேரலானார்கள்.

கலகம் குழப்பங்களில் ஒவ்வொருவனும் தனக்கு அரை மனதாயிருக்கும் போதுங்கூடத் தன்மன மில்லாமலே அக்கலகத்திற் சம்பந்தப்பட்டவனாகிறான். குடிகள் கலகத்திற் கூம்பலிலுள்ள ஒவ்வொருவனும் தன்னிஷ்ட மில்லாமலே சண்டையில் முன்னே தள்ளப்படுகிறான். ஏட்ரியன் தன் நண்பர்களுக்குச் சிறிது புத்திமதி சொல்லத் துவக்குகையில் அவர்கள் அதைக் கவனியாமற் கொலன்னு வம்சத்தைச்சேர்ந்த மேலான கனவான் தங்கள் படையிலிருப்பதனாற் பெருமை பாராட்டி அவனை முன்னணியில் வைத்து எதிரிகளைத் தாக்கினார்கள். ஏட்ரியன் யுத்த சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றிருந்தமையால் அந்தஸ்திலும் ஆயுதப்பயிற்சியிலும் தனக்குச் சமமானவர் இல்லாத எதிரிகளை எதிர்ப்பது தகாதென்று இகழ்ந்து தன்மேல் இரண்டொருவர் எய்த ஆயுதங்களை மாத்திரந்தடுத்தான். விசேஷ நற்குணம் ஏதும் அவனிடத்தில் உள்ளனவாக இதுவரையில் வெளிக்குத் தோன்றாவிடினும் அவன் பந்துக்களிடத்துள்ள தீக்குணங்க ளொன்றேனுமவனிடத்திலில்லாததுபற்றி எல்லாராலும் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டும் நல்ல வம்சமும் சம்பந்தமும் உள்ள அவன் இரத்தத்தைச்சிந்த அவன் பகைவரி லொருவருந் துணியாததனால், அவன்மேலெறிந்த ஆயுதங்கள் வெகு சில. இதுவரையிற் சண்டையிற் கலக்காத கம்மாளன் மாத்திரம் மிக்க துணிகரத்தோடு அவன் எதிர் வந்து "கொலன்னுவானாலும் ஓர்ஸினோவானாலும் ஜனங்களுக்குப் பகைவரென்று நான் முன்னமே கூறவில்லையா? ஏதோ ஒரு பிரபுவின் குற்றத்திற்காக உன் ஜனங்கள் எத்தனை பேர்களைக் கொல்கிறார்கள். பார்த்தாயா? இவ்வாறுதான் ஒவ்வொரு பிரபுவும் மற்றொரு பிரபுவின் குற்றத்திற்காக ஜனங்களைக்கொன்று, "நான் எவ்வளவு நியாயமாயிருக்கிறேன் பார்" என்று கூறுவது வழக்க மென்று கோபத்தோடு சொன்னான்.

"நான் உனக்கு இப்போது பதில் கூறேன், இம்மாதிரி இரத்தம் சிந்துவது உனக்கு உண்மையாக விசனகரமாயிருக்குமானுல் நாம் இருவரும் சேர்ந்து இதைத்தடுக்கலாம் வா" என்றழைத்தான் எட்ரியனும்.

"என்னையா கூப்பிடுகிருய்? நான் வர மாட்டேன். இன்று அடிமைகள் இரத்தம் சிந்தட்டும்; பிரபுக்களின் இரத்தத்தால் அதை அலம்ப வேண்டிய காலம் நாளை வரும்" என்ருன் கம்மாளனும். எட்ரியனும் அவனோடு மேலே வார்த்தையாடப்பொருது "ஏ துஷ்டா! அப்பாற்போ" என்று கூறித் தன் கத்தியின் அடிக்கட்டையால் தள்ளவும் கம்மாளன் தன் சம்மட்டியை மேலே சுழற்றி யெறிந்ததனுல் எட்ரியனும் இலாகவமாய்க் குதித்து அதற்குத்தப்பித்துக் கொள்ளாதிருப்பானுயின் மடிந்தேயிருப்பான். கம்மாளன் இரண்டாந்தரம் சுழற்று முன்னமே எட்ரியன் கத்தி அவன் வலது கையில் இருதடவை தாவவும் சம்மட்டியும் கீழே விழுந்தது; அவன் கைப்பலமும் போயிற்று. கம்மாளனைக் கொலன்னு வம்சத்தார் சூழ்ந்துகொண்டு "கொல்லு கொல்லு" என்று கதறினர்கள். கொலன்னுவிடத்திற் கூலிக்குச் சண்டைசெய்யும் ஒரு ஜர்மானிய படைச்சேவகன் "அவனை யார் கொல்வது?. அவன் அமைதிக்கும் ஒழுங்குக்கும் விரோதமாகச் சத்தியம்பண்ணித்தந்த பயங்கரமான பாதகர்களின் கூட்டத்தைச் சேர்ந்தவனுயினனே! ரியன்ஜியின் துணைவன்; எப்போதும் குடிகளைப் பற்றியே புலம்புகிருன்" என்று திருந்தியும் திருந்ாததுமாய் இடாலிய பாஷையில் மொழிந்தான்.

"ஏ. மிலேச்சா, நீ சொல்வது சரி, கொலன்னு, ஓர்ஸினி, எல்லாரும் வாருங்கள்; என்மார்பைத்திறந்து மேலுடுப்பைக் கிழித்தெறிந்துவிட்டு உங்கள் கூரிய ஆயுதங்களா லென்னிருதயத்தை ஆழத்தோண்டு வீரானுல், உங்களெல்லாருக்கும் விரோதமாயுள்ள 'ரியன்ஜியும் குடிகளும்' என்பதை நடுவிற் காணுவீர்கள்" என்று மொழிந்தான் அந்தத் தாஷ்டீகமான கம்மாளனும். இவ்விதமாய் அவன் சொன்னதும் அவன் பேச்சின் உரத்த சத்தமானது மற்றெல்லாச் சத்தங்களையு மடக்கி அமைதியுண்டாக்க 'ரியன்ஜியும் குடிகளும்' என்று அவன் வாயிலிருந்து வந்ததும் அஃது ஒன்றுக்கு நூறுய்க் கூட்டத்தினின்றும் எதிரொலியெழும்பிற்று.

கம்மாளன் சொல் ஒவ்வொருவர் மனத்திலும் நன்ருய்ப்பட்டது. ரியன்ஜி என்ற பெயரைக்கேட்ட மாத்திரத்தில் எட்ரியனது முகக்களை மாறத் தனக்குத்தானே ஏதோ சொல்லிக்கொண்டு சிறிது நேரம் அங்கு யுத்தகளத்திலேயே நின்று துக்கமான மனோராஜ்ஜியத்தில் மூழ்கியிருந்தான். கூச்சல் அடங்கினதும் அவன் மயக்கந் தெளிந்து "தோழா! உன் காயத்துக்காக விசனப்படுகிறேன்; நாளை என்னைக்காண்; எனக்கு நீ குற்றம் செய்ததாய் உனக்குப் புலப்படும்" என்று கம்மாளனைப்பார்த்துச் சொல்லிவிட்டுத் தன்

ளோடு கூடவிருந்த ஜர்மானிய படைத்தலைவனுக்குச் சைகைச்செய்து ஜனங்கள், பிரபுவானதனைப் பயபக்தியோடு வழிவிடக் கூட்டத்துள் நுழைந்து அப்புறம் சென்றான். அவ்வாறு அவன் செல்லுகையில் அக்கூட்டத்தில் அவனைப்பற்றி அவன் காதிற்படும்படி ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்ட விதமாய் பேச அவன் வம்சத்தார் ஒருநாளுங் கேட்டிரார்கள்.

"இவன் ஒரு கொலனன்" என்றானொருவன்.

"என்றாலும் மாதர் கற்பழிப்பவனல்லன்" என்று, சிரித்துக்கொண்டே சொன்னான் மற்றொருவன்.

"கொலைக்காரனு மல்லன்; என் தகப்பனைக்கொன்றவன் அவனல்லன்" என்றான் வேறொருவன்.

"இதுவரையில் ஒருவரும் அவனைச் சபித்ததில்லை; ஆகையால் நாம் வாழ்த்துவோம்" என்றான் இன்னொருவன்.

"ஆ! தெய்வந்தான் நமக்குத்துணைபுரியவேண்டும்; இந்தப்பாம்பு இன்னும் குட்டி; நாளாவட்டத்தில் விஷப் பல்முளைக்கும்" என்று நரைத்த தாடியுள்ள கிழவனொருவன் தன் தடியை ஊன்றிக்கொண்டே சொன்னான்.

"தாதா! உமக்கு வெட்கமில்லையா அவன் எவ்வளவு அழகுள்ள வாலிபன்! கொஞ்சமேனுங் கர்வமுண்டா? அவன் எப்படிச் சிரிக்கிறான் பாரும்!" என்று ஓர் அழகுள்ள ஔவை கூறினாள்.

"ஒருவன் பெண்சாதியைப் பார்த்துப் பிரபு சிரிக்கும்போது புருஷனுக்குக் கண்ணியமென்னவிருக்கும்?" என்று பதிலுரைத்தான் கிழவனும்.

இது கேட்டதும் "அப்படியன்று; ஒருவன் பெண்சாதியையாவது கன்னிகையையாவது அவர்கள் அநுமதியின்பேரில் அழைத்துக்கொண்டு போனால் அது நியாய மென்று எனக்குத் தோன்றுகின்றது. ஆனாற் கத்தி கேடயங்களுடன் ஒரு ஸ்திரீயைப் பலாத்காரமாய் இழுத்துக்கொண்டு ஒரு பிரபு சென்றால் அவனைத் துஷ்டனென்றும் கூத்திக்கள்ளனென்றும் சொல்ல வேண்டியிருக்கிறது" என்றான் அங்கிருந்த கசாப்புக்காரனொருவன்.

இவ்வாறாக பிரபுச்சிறுவன் சென்றபோது ஒவ்வொருவரும் தம்மனத்தில் தோன்றியவாறு கூறினாரேனும் ஜர்மானிய படைத்தலைவன் செல்லலும் அவனுக்கு மிக்க பயத்தோடும் ஒதுங்கினார்கள். ஆனாலது மரியாதையாலன்று; அவனைக்கண்டதும் அவர்கள் கண் இரத்தம் தெறிக்கவும் முகம் வெளுக்கவும் தலை குனியவும் உதடு நடுங்கவும் ஏதோ ஜனமப்பகையாளியைப் பார்த்ததுபோல நடுக்கமும் பயமுமுண்டாயிற்று. ஜர்மானிய படைத்தலைவனும் இதைக்கண்டுகொண்டு சிறிது சிரிப்பும் சிறிது கோபமுமாய் ஜனங்களைத் தள்ளிக்கொண்டு போனான்.

"இந்த ஜர்மானிய பாதகர்களுக்கு விநாச காலம் வாராதா?" என்றானொருவன்.

"சுவாமி அப்படியே ஆக வேண்டும்" என்றான் மற்றொருவன்.

"வாயை மூடு அப்பன் காதிற் பட்டதோ நீ உயிரிழந்தாய்" என்று சுற்றிப்பார்த்துக் கொண்டே சொன்னான் வேறொருவன்.

"ஆ ரோமாபுரி! ரோமாபுரி!! கூலிக்கமர்ந்த ஒரு மிலேச்சன் காலடிச் சத்தங்கேட்டதும் நீ நடுத்தெருவில் நடுங்க என்ன கதிக்கு வந்து விட்டாய்!" என்று மற்றவரிலும் சிறிது மேம்பட்ட தோற்றமும் கறுத்த உடையுமுள்ள ஒருவர் வெகு துக்கத்தோடு சொன்னார்.

உடனே கசாப்புக்காரன் கை கட்டி வாய் பொத்திக்கொண்டு "நமது வித்துவான்களிலும் தனவான்களிலும் ஒருவராகிய இவர் கூறுவதை நாம் காது கொடுத்துக்கேட்போம்" என்றான்.

"அவர் ரியன்ஜியின் தோழரில் ஒருவர்" என்றான் மற்றொருவன்.

நல்ல வம்சத்திற் பிறந்து கீர்த்தி பெற்ற பேண்டால்போ என்பவன் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டும் துக்கம் வெட்கம் கோபம் இவைகளைக் காட்டுங்குறிகள் முகத்தில் தோன்றவும் கும்பலினின்றும் வெளிப்பட்டுச்சென்றான்.

இஃது இவ்வாறிருக்க. எட்ரியனும் கூட்டத்தைக்கடந்து ஜனங்களின் சந்தடியில்லாத ஒருதெருவிற் போய்நின்று தன்னுடன் கூடவந்தவனைநோக்கி, "ரோடால்ப்! இன்று நமது ஜனங்கள் ஒருவரையும் வருத்தக்கூடாது அந்தக்கும்பலிற்போய் மார்டினேவை நானே அவன் குற்றத்திற்காக என் கத்திக்கு இரையாக்குவதாக நமது ஜனங்களிடத்திற் போய்ச்சொல்லி அவர்களை அந்தச்சண்டைச் சமுகத்தினின்றும் விலக்கி யிட்டுக்கொண்டுபோ. நானேபோய்க் கலகத்தை அடக்கப் பிரயத்தனித்தேனேயானால்என்னைக்கண்டபோதே அவர்கள் யுத்தத்திற்குக் கிளம்பிவிடுகிறார்கள். உன்னிடத்தில் அவர்களுக்கு மதிப்பு இருக்கிறது. ஆகையால் நீபோ" என்றான்.

"அடிகளின்மதிப்போ.உமதுகட்டளை மிக்ககடினமாயிருக்கின்றது; இன்னம் இரண்டொருமணிகாலம் அவர்கள் இரத்தம்சிந்துவது எனக்குக் களிப்பைத்தரும் என்றாலும் மன்னிக்கக்கோருகிறேன். தங்கள் கட்டளைப்படி நடப்பதில் தங்கள் பந்துவாகிய எங்கள் எசமானன்கட்டளைப்படி நடந்தவனா வேனா? தனதுதவிர மற்றவர்களது தனத்தையும் இரத்தத்தையும் பாராமரியாத கொலனாகிழவன் ஸ்டிபன் உப்பையன்றோ நான் தின்கிறேன். அவர் கட்டளைப்படி நடக்கவன்றோ நான் சத்தியம்செய்து கொடுத்திருப்பது?" என்றான்.

எட்ரியனுக்கு உடனே கோபம்வந்துவிட்டது; ஆயினும் அடக்கிவழக்கப்பட்டவனாதலால் வெளிக்குக் காண்பிக்காமல் எழும்பியகோபத்தை யுள்ளடக்கிக்கொண்டு அமைதியோடும் கவுரவத்தோடும் பின்வருமாறுகூறினான்;

"என்கட்டளைப்படிநட, இந்தக் கலகத்தையடக்கி, நாம் பொறுத்தவர்களாயிருப்போம். இன்னும் ஒருமணிக்குள் அமைதியுண்டாக்கி நாளை என்னிடம்வா, உனக்குத் தகுந்தவெகுமதி செய்கிறேன். இந்தப்பை அச்சாரமாக இருக்கட்டும்; இனி என் பந்துவின்பெயரைப் பயமரியாதையோடு கூறுவாய், அவர் பெயரால்தான் நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். உற்றுக்கேள்; சத்தம் அதிகமாய்விட்டது, சண்டைமும்மரம் அதிகரிக்கிறது ஒருநிமிஷமும் நில்லாதே, உடனேபோ"

ரோடால்ப் மேற்குலத்தானுடைய உறுதியையையும் சாந்தகுணத்தையும் கண்டு சிறிதுகலங்கி மறுமொழிகூறாது தலையசைத்துக் கொடுத்தபணத்தைத் தன்மடியில் வைத்துக்கொண்டு ஜனங்கள் கும்பலாய்நெருங்கியிருக்குமிடம் சென்றான். அவன்போவதற்கு முன்னமே அங்கே நடந்ததுவேறாய்விட்டது.

அந்தவிடத்திலேயே தனித்துநின்ற வாலிபனாகிய குதிரைவீரனோ, சூரியன் அஸ்தமிக்கச் செவ்வானத்தின் ஜோதி தன்கவசத்தின்மேல்விளங்கும் கூலிப்படை வீரனைக்கண்ணுக்கெட்டியவரையிலும் பார்த்துப் பிறகு "நிர்ப்பாக்கியநகரமே! எவ்வளவோ மகிமைகளை ஞாபகப்படுத்தும் உற்பத்திஸ்தானமே! ஆயிரக்கணக்கான ஜாதியாருக்கெல்லாம் அரசியாயிருந்து கைசோர்ந்த மாதே! பயங்கொள்ளிகளும்பிரஷ்டர்களுமாகிய உனது புத்திரர்களால் அரசிழந்து எவ்வளவு பாழடைந்தாய்! உனது பிரபுக்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்யவும் உனது ஜனங்கள் பிரபுக்களைச் சபிக்கவும், மதாசாரியர்கள் ஒருவர்க்கொருவர் சமாதானம் உண்டாக்குவதை விட்டுச் சண்டைமூட்டவும் உன்மதத்தலைவன் அடைக்கல ஸ்தானத்தையே வீடாகவும் வேற்றரசர் விட்ட மானியங்களே தனது ராஜ்ஜியமாகவும் ஒரு பிரஞ்சுக்கிராமமே தனது ராஜதானியாகவும் ஆக உனது ஆகாயமளாவிய மதில்களை விட்டுப் போகவும் மிகவும் பெருமைபாராட்டக்கூடிய வம்சத்திற் பிறந்து அநேக சக்கிரவர்த்திகள் குமார்களும் தேவர்கள் பரம்பரையிலுண்டானவர்களுமாகிய நாங்களே எங்களிடத்திற் சம்பளத்தைப் பெற்று எங்கள் கோழைத்தனத்தைப் பரிகசிப்பவர்களும் குடிகளை அடிமைகளாக்கித் தங்கள் எசமானனையே எதிர்ப்பவருமாகிய கூலிப்படையின் துணையைக்கொண்டு அகந்தைக்கும் வெறுப்புக்கும் இடமான நாட்டைக் காக்கவும் ஆய்விட்டாயே! ஐயோ! ரோமிற் பரம்பரைத்தலைவர்களாகிய எங்களுக்குத் தகுந்த அரண் குடிகளின் நன்றிகொள் இருதயந்தான் என்பதை மாத்திரம் உணர்வோமேயானால்" என்று தனக்குத்தானே வெறுப்புடன் சொல்லிக்கொண்டான். தான் கூறியவற்றின் உண்மையை நன்றாய் உணர்ந்தவனாகில் அவன் கண்களினின்றும் துக்கக்கண்ணீர் தாரைதாரையாகப்பெருகிற்று. பெண்கள் அழும் கோழைக்கண்ணீர் போலாது உயர்ந்த பதவியிலிருந்து ஈனஸ்திதிக்கு வந்த ஒரு ஜாதியாரை நினைத்துப் பெருகியதனால்

# பொருண்முறை நூல்.

## IV - ஆம் அத்தியாயம்.

### பொருள் பகிர்தல்

(309-ம் பக்கத் தொடர்ச்சி.)

வினைசெய்விப்போர் தாங்கள்வைத்திருக்கும்முதலினாலும் தங்களுடைய சாமர்த்தியத்தினாலும் தங்களுக்கு வரும்இலாபம் மிகுதலும், குறைதலும் எனத் தெரிந்திருந்தும், தாங்கள் வர்த்தகத்திற்காக வைத்த முதற்பொருளுக்குத் தக்க இலாபம் வர வேணுமென் றெண்ணுகின்றார்கள். வினை செய்விப்போ னொருவன் தன் முதலையே வைத்து வியாபாரம் முதலியது செய்தானாயினும், இலாபம் முதலியவை கணக்கிடும் நிமித்தம் தனக்கோர் முதற்பொருள் இருந்ததாக வெண்ணாமல், இதில் உபயோகித்த பொருள் கடன் கொண்ட முதலென எண்ணல் வேண்டும். வினைசெய்வா னொருவன் நூற்றுக்கு ஐந்து ரூபாய் வீதம், வட்டிக்கு ஐயாயிரம் ரூபாய் கடன் வாங்குகின்றான். இதைக் கொண்டு ஓர் பஞ்சாலை ஸ்தாபிப்பதற்காக வேண்டிய இயந்திரங்களும் மற்றுமுள்ள உபகருவிகளும்வாங்குகிறான். இப்முதற் செலவன்றியும், அவ்வாலைஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்குவரிரூபா 100-கொடுத்தல்வேண்டும். தான் வைத்த கூலியாட்களுக்கு வருஷமொத்தத்தில்கொடுக்கவேண்டிய கூலி ரூபா-6,000. ஆலைக்குப் பஞ்சு வகையறு வாங்குவதற்கு ரூ. 4000 வேண்டியிருக்கிறது. கடன் கொண்ட முதலுக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் கொடுக்கவேண்டிய வட்டி ரூபா. 250. ஆகவேஇதன் விஷயமாக இவனுக்கு ஏற்படும் செலவு மொத்தத்திற்கு விவரம் யாதெனப்பார்ப்போம்.

| | | |
|---|---|---|
| ஆலையிருக்கும் நிலத்திற்கு வரி. ... ... | ரூபா. | 100-0-0. |
| வினை யாட்களுக்கு கூலி. ... ... | ரூபா. | 6,000-0-0. |
| பஞ்சு வகையிருக்கள். ... ... | ரூபா. | 4,000-0-0. |
| கடன் வாங்கிய ரூபா. 5,000.க்கு வட்டி. | ரூபா. | 250-0-0. |
| ஆக மொத்தச் செலவு | ரூபா. | 10,350-0-0. |

இவனுக்கு வரக்கூடிய*மொத்த வரும்படியில் இச்செலவைக் கழித்துப் பார்க்கின் மீதியிருந்தவைதான் இவன் அடையும் இலாபம். ஆலையி லுண்டாகும் வஸ்திரம் முதலிய பொருள்களை விக்கிரயம் செய்வதால் வரக்கூடியது ரூபா-12,000. இவன்செய்தசெலவு ரூபா-10,350. போக இவனுக்கு இலாபம் ரூபா-1650. முதற்பொருள் கடன் வாங்காது இவனுடைய சொந்தப்பொருளு

* Gross income.

யிருக்கும் பக்ஷத்தில் அதற்குரிய வட்டி ரூபா 250-ம் இவன் இலாபத்திற் சேர்ந்து ஆக இலாபமொத்தம் ரூபா, 1900-ஆகிறது.

மற்றெல்லா விஷயங்களிலும் இதே நிலைமையிலிருக்கும் வேறொரு வினைசெய்விப்போனுக்கு, தன் அதிர்ஷ்ட ஈனத்தினாலோ அல்லது சாமர்த்தியமின்மையாலோ இலாபம் ரூபா 300 தான் வருகிறது. இதிலும் முதற் பொருளுக்குச் சேரவேண்டும் வட்டியைக் கழித்துப் பார்த்தால் மீதியாகும் 50-ரூபாய்தான் இவனுக்கு இலாபம் ஆகிறது. இது தான் இவனுக்கு வருஷமுழுதும் உழைத்ததின் பயன்.

இக்காலத்தில் நடக்கும் வியாபாரங்களில் சாதரணமாய் * வினைசெய்விப்போன்தான் நயநஷ்டத்திற்குப் பாத்திரவானாகிறான். ஏனெனில், நிலத்திற்குரியானுடைய **வாரமும்** முதலுக்குரியானுடைய **வட்டியும்** வினையாட்களுக்குரிய **கூலியும்** முதலிலேயே ஏற்பாடாய்விடவேண்டியிருக்கின்றதேயன்றி வினை செய்விப்போனுடைய மொத்த வரும்படியைப் பொறுத்ததன்று. ஆயினும் இத்தகைய செலவுகளெல்லாம் போக இவ்வளவு இலாபம்வரும் என்னும் நிச்சயம் இவனுக்கில்லாவிட்டால் இவன் சாதாரணமாய் இவ்வேலையிலிரங்கமாட்டான். அப்படி இரங்கின போதிலும் ஒருதரம் நஷ்டம் வந்தால் மற்றோர்தரம் அதிக இலாபம் வரும், அதனால் இரண்டையும் நிரவிக்கொள்ளலாம் என்னும் எண்ணமேயன்றி வேறில்லை. சிலருக்கு அதிக அதிர்ஷ்ட ஈனத்தினால் நஷ்டமே மேலிடுவது முண்டு. அத்தகையர்கள்வியாபாரவிஷயங்களுக்குத்தகுதியற்றவர்களாயிருக்கிறார்கள். அப்படி நஷ்டமேற்படும் போலிருந்தபோதிலும் எதில் நஷ்டம் குறைவாயிருக்குமென்று தோன்றுமோ அதில் பிரவேசிக்க வேண்டியிருக்கிறது. வியாபரத்தில் வினைசெய்விப்போனுக் கிருக்கும் கஷ்டமே கஷ்டம். நிலமுடையான் தன் நிலத்துக்குக் † **குடியானவன்**வருமுன்னமே, கொடுக்க வேண்டிய **வாரம்** இவ்வளவென முடிவுசெய்து கொள்ளுகின்றான். முதலாளியும் பணம் கொடுப்பதற்கு முந்தியே **வட்டி** யிவ்வளவென்றும் ஏற்பாடு செய்து கொள்ளுகிறான். வினையாட்களும் தங்களுக்குச் சேரவேண்டிய **கூலி** இவ்வளவின்னதெனவும் வினைசெய்விப்போனிடம் ஏற்பாடு செய்து கொள்ளுகிறார்கள். இவனுடைய இலாபமோ அப்படி முடிவதற்கில்லை. தன்வேலை முழுதும் முடிந்து, அதனாலாகிய பொருள் முழுதும் விற்பனையான பிறகுதான் தன் இலாபமின்னதெனவும் தெரியும். மற்றவர்களுக்குச் சாதாரணமாய் நஷ்டம் ஏற்படுவதில்லை. இவனுக்கோ இது முடிந்தவுடன் இலாபத்திற் கேது வில்லாவிட்டால் நஷ்டமின்னதெனவும் தெரியவரும்.

---

* Employer.

† Tenant.

இப்படிச் சொன்னதினுல் * வினேயேவுவோன் மற்றவர்களுக்கு முதலிலேயே வாரமும், வட்டியும், கூலியும் கொடுத்து விடுகிருனென்பதுமில்லே. ஆயினும் வருஷத்திற் கோர்தரமாயினும், அல்லது மூன்றுமாதத்திற்கு ஓர்தரமாயினும் வாரத்திற் கொருமுறையாயினும், வார முதலியவை கொடுக்க வேண்டுமென்று மாத்திரம் ஏற்பாடு செய்து கொள்ளுகின்ருன்.

(இன்னும் வரும்.)

கல்குளம் - குப்புசாமி முதலியார்.

---

## பரீட்சை வினுக்கள்.

---

I. (a) சீவகசிந்தாமணிச் செய்யுணடை வளத்தைச் சுருங்கவிளக்கி, அதற்குத் தொல்காப்பியனுர் கூறிய பெயரையும் எழுதுக.

(b) 'நாமகளிலம்பகம்' எனுஞ் சொற்ருெடர்க்குப் பொருளுரைத்து, அப் பொருளேக் கதையினேடியைத்துக் காட்டுக.

(c) ஆசிரியர் நச்சினர்க்கினியர் உரைநடைக்கும் பரிமேலழகர் உரைநடைக்கும் உள்ள வேறுபாடென்னே? இவ்விரண்டினும் நலப்பாடுற்றது யாது? ஏன்?

(d) 'தண்டியலங்கார சாரத்திற்கு' முதனூலெது வென்ப? தமிழில் வேறிரண்டு அணிநூல்களெவை?

II. (a) கீழ்வரும் செய்யுட்களிலுள்ள பாடபேதங்களே எடுத்தெழுதி அவற்றுள் இன்னின்ன செவ்விய வென்பதுங் காட்டுக. (1) "பசீத்தருப சும்பொனின் மாடத்துச்சிமேற், றூத்திரண் மணிக்குட நிரைத்துத் தோன்றுவ". (2) "யாம மும்பக லும்மறி யாமையாற், பூமி மாநகர் பொன்னுல கொத்ததே."

(b) " குங்குமத் தோளி னுனுங் கொழுங்கயற் கண்ணி னுளுந்
தங்கிய காதல் வெள்ளந் தணப்பறப் பருகு நாளுட்
டிங்கள்வெண் குடையி னுற்குத் திருவிழுக் குற்ற வண்ணம்
பைங்கதிர் மதியிற் றெள்ளிப் பகர்ந்தெடுத் துரைத்து மன்றே."

இச்செய்யுளுக்கு ஆசிரியர் நச்சினர்க்கினியர் கூறிய கருத்துப்பொருளேத் தெளிவாயெடுத்தெழுதுக.

*Employer

(c) "கைபுனை சாந்தமுங் கடிசெய்மாலையும்" எனுஞ் செய்யுளுரையில் "இனிப் பிறர் மாசுபட்ட தென்று நாணுலே பூவாகிய படாம் போர்த்ததுவு மாம்." என்றதிற்'பிறர்' என்பது யாரை?

(d) "நெடுங்கொடி நிழன்மதி நெற்றிதைவர, வுடம்புவேர்த்தினமழை யுரறிநோக்கலி, னடுங்குபு நல்வரை மாடத்துச்சிமே, லடங்கி வீழ்ந் தருவியி னழுவபோன்றவே" :—இச்செய்யுளிற் போந்த குறிப்புப்பொருளென்னை?

III. i. சச்சந்தன் ஒழுக்கத்தை யுணர்வதனாற் போதரும் பயன்யாது? இவன் எத்தன்மையான்?

ii. நிமித்திகன் : தருமதத்தன் ;—இவ்விருவரும் யார்? இவர் எவ்வெச்ச மயத்தி லெவ்வாறு உரை நிகழ்த்தினரென்பதூஉம், அவ்வுரையளவாலுணர்த்தப்படும் அவர் குணங்க ளிவையென்பதூஉம் எழுதுக.

iii. "அடுகளிற் றெருத்தினிட்ட, வண்ணப்பூந் தவிசு தன்னை ஞமலிமே லிட்ட தொக்கும்" :—இஃதியார் கூற்று? இக்கூற்றினுண்மையை யாராய்ந் தெழுதுக.

IV. (1) 'ஒன்பதின்சாண் நடப்பினும்' என்னலாமோ? பொருத்திக் காட்டுக. '(2) எழுவர் தம்மகலம் பூசி' இதில் 'எழுவர்' யார்யார்?(3) "நகரா தலின் ஊடற்குக்காரணங் கூறுராயினா" இதனை இனிது விரித்துக்காட்டுக. (4) பழைய அரசமகளிர் ஊசலாடு மிடம்யாது? (5) குயிலை யின்பநூலு டையார் என்னென்று கூறுப. (6) அறந்தரு திகிரிக்கு வழியடையாவன யாவை (7) கடையாமத்திற்கண்ட கனவின் பயனென்னை? (8) குரவராவார் யார்?

V. (1) கீழ்வருவனவற்றிற்கு உவமை கூறப்பட்டனயாவை:?— கமுகம்பாளை, கோழித்தலை; மகளிர்செவி, தோள், விரல்கள்; கழுத்து, குலந் தூய்மை. (2) "குழவிக்கோட்டிளம் பிறையுங் குளிர்மதியுங் கூடினபோ, லழகுகொள் சிறுநுதலு மணிவட்ட மதிமுகமும்" :—இதனை மேற்கோளு டன் விளக்கியெழுதுக. (3) பிணையல் : சூட்டு : கண்ணி :—இவை தம்முள் வேற்றுமைகாட்டுக. குறங்குசெறி, கடிப்பிணை, தெய்வவுத்தி :—இவற்றைப் பொருளுடன் விளக்குக,

VI. (a) கீழ்வருஞ் சொற்களுக்குப்பொருள் எழுதுக:—இன்பிடி, ஞாயில், ஆவணம், ஐயவி, துரால், சருனை, மடைநூல், பவணம், பிண்டி, உ வளகம், நாந்தகம், கப்பணம்.

(b) பின்வருவனவற்றை யினிதுவிளக்குக :—(1) 'எத்தருமயிற்குழாம்' (2) அட்டொளியரத்தம்' (3) 'குஞ்சிமாண்கொடி' (4) 'வைகனுளும்வைகி ன்று' (5) 'ஆமணங்கு குடியிருந்தஞ்சுணங்கு பரந்தவே.'

(c) பின்வருவனவற்றிலுள்ள சொற்பொருள் விசேடங்களை விளக்கி யெழுதுக :—(1) 'முல்லையங்குழலார்' (2) 'மாண்பினஞ்சுமமிர்தமும்போல் குணத்த பொருகயற்கண்' (3) 'பொனங்கொடி யமிர்தனும் பொன்னெ டுங் குன்றனும்' (4) 'துணைபுண ரன்னத் தூவி' (5) 'வேழந்துற்றிய வெள்ளில்.'

VII. (a) "எண்ணெயு நானமு மிவைமூழ்கி யிருடிருக்கிட்
டொண்ணறுந் துகிற்கிழி பொதிந்துறை கழித்தனபோற்
கண்ணிருண்டு நெறிமல்கிக் கடைகுழன்ற கருங்குழல்கள்
வண்ணப்போ தருச்சித்து மகிழ்வானுத் தகைபவே":—

இச்செய்யுளை வினைமுடித்துக்காட்டி யுவமையை விரித்துப் பொருத்தி யெழுதுக.

(b) "அரவுகான்றிட்ட வங்கதிர் மாமணி, யுரவு நீர்முத்து முள்ளுறுத் துள்ளன, விரவன் மார்தர்க்கு மின்னவை யீவதோர், புரவு பூண்டனர் பொன்னகர் மாந்தரே":—இதற்கு மூன்றுவகையாற் பொருளெழுதி யின்னது சிறந்ததெனக் காட்டுக.

VIII. (1) ஒட்டணி : உள்ளுறையுவமம் :—இவைதம்முள் வேறுபாடென்னை? (2) பொருள்கோளிலும் அணிவகையிலும் 'நிரனிறை' யைச் சேர்த்தெண்ணியதற்குக் காரணங் கூறுக.

(b) (1) தற்குறிப்பேற்ற வணியை வகைப்படுத்தி யிலக்கணமெழுதுக. சிலேடை எத்தனை பகுதியதாம்? "கிறைபடுவ புட்குலமே" எனுஞ் செய்யுள் எதன்பாற்படும்? (2) சங்கீரணம், ஒப்புமைக்கூட்டம், இலேசம் இவற்றை விளக்குக.

(c) "தருமன் தண்ணளி யாற்றன திகையால்" என்பதும் "நெடுங்கொடிநிழன்மதி நெற்றி தைவர" என்பதும் எவ்வெவணி பற்றிவந்தன?

XI. (a) 'போற்றி' என்னுஞ்சொல்லுக்கு ஆசிரியர் - நச்சினார்க்கினியர்கூறிய பொருளுரைத்துச் சொல்லிலக்கணங்கூறி மேற்கோளுங்காட்டுக.

(b) பின்வருவனவற்றை யுதாரண முகத்தான் விளக்குக :—'உம்மீற்றுன்வந்ததோர் எவல் கண்ணியவியங்கோள்' (2) 'ஒருமை பன்மை மயக்கம்' (3) 'பகுதிப்பொருள் விகுதி' (4) 'முன்னிலைப்புறமொழி.'

## சமாசாரங்கள்.

**க்ஷேத்திரகணிதபாலபோதினி முதற்புத்தகம்** :—நமது பார்வைக்கணுப்பப்பட்ட இஃது ஆங்கிலபாடையினின்றும் சேஷம்பாடி - ராஜகோபாலாசாரியார் பி. ஏ. என்பவரால் தமிழில் மொழிபெயர்க்த்ப்பட்டு விசேஷமான விவரணங்கள் குறிப்புக்கள் அப்பியாசங்கள் வேறுமுறை நிரூபணங்கள் மேல்வரிச்சட்டமாகிய எடுத்துக்காட்டிய வேறுபல ரூப நிர்மாணக் கோட்பாடுகள் விஷயநிரூபணக் கோட்பாடுகள் ஆகிய இவற்றுடன் லோயர்செகண்டரி, பண்டித பரீட்சைகள் முதலாயினவற்றிற்குப் படிக்கும் வித்தியார்த்திகளின் உபயோகங்கருதிப் பதிப்பிக்கப்பட்டுளது. ஏறக்குறைய இருநூறு பக்கங்களுள்ளது. வேண்டிய யாவற்றையும் மாணுக்கருளங்கொளத்தக்கவாறு தெளிவுபெறக்கூறுவது. மிகவும் நேர்த்தியான காகிதத்திற் பார்ப்போர்க்கு விஷயங்கள் முதற்பார்வையிலேயே விளங்கும்படி யச்சிடப்பட்டுளது. கனம்பொருந்திய நியாயாதிபதி ம-ா-ா-ஸ்ரீ டிவான்பஹதூர் சர் எஸ். சுப்பிரமணிய ஐயர் கே. ஸி. ஐ. ஈ. அவர்களுக்கு அங்கிதஞ்செய்யப்பட்டுளது ; யாவரும் வாங்கி எளிதில் விஷயத்தை உணரத்தக்கது. இந்த க்ஷேத்திரகணிதசாஸ்திரமானது ஆதியில் யூக்லிட் என்னும் புலவர்பெருமானுற் கிரேக்கபாஷையில் எழுதப்பட்டிருந்தது. இது சென்னை ஐரிஷ் அச்சுக்கூடத்தலைவராகிய வி. ஜே. மாணிக்கவேலுமுதலியார் அண்டு கம்பெனியாரால் பிரசுரிக்கப்பட்டுளது. இதன்விலை அ௴-பத்து. இனி யிதுநிற்க. திரிசிரபுரத்திலுள்ள எஸ். பீ. ஜீ. கலாசாலை கணிதசாஸ்திர பட்டாசாரியராகிய **மாலிம் துரையவர்களாலும்** அடைக்கலம்பிள்ளை யவர்கள் பி, ஏ. என்பவராலும் ஆங்கிலமுந் தமிழுமாகக்கலந்து அச்சிடப்பட்டு வெளிப்போந்த க்ஷேத்திரகணித நூலொன்றுளது. அந்நூலையிதனோடு சீர்தூக்கி யாராயுமிடத்து அதனினும் இது பெரிதும் சிறப்புடைத்தாம் என்பது பார்க்குநர் யாவர்க்கும் பொள்ளெனப் புலப்படும். ஆகவே இந்நூலினை யாவரும் வாங்கிப்படிப் பார்களென்று நம்புகின்றனெம்.

***

**விபூதிருத்ராக்ஷதாரணநிருபணம்** :—இஃது இராஜமன்னார்குடியின்கண் வசிக்கும் "**மகர் மகோபாத்தியாயரார்**" என்னும் பட்டம்பெற்ற **தியாகராஜதீக்ஷிதர் அவர்களால்** சம்ஸ்கிருதத்தில் வேத உபநிஷத்தாதி பிரபலப் பிரமாணங்களைக்கொண்டு எழுதப்பட்ட மேலானகிரந்தம். வைதீக சமயத்தாரனைவர்க்கும் மிக்கபிரயோசனமாயுள்ளது. தமிழ்ப்பாஷையில் எட்டயபுரம் சமஸ்தான வித்துவான் பிரம்மஸ்ரீ வெங்கடாசல தீக்ஷிதரவர்களால் இஃது மொழிபெயர்க்கப்பட்டு திருநெல்வேலிஜில்லா **விருதை சிவஞான யோகிகளால்** பார்வையிடப்பெற்று அச்சிடப்பட்டு வருகிறது. நாளது ஜூன்௴ 20-தேதிக்குள் அதுவெளிவரும். வேண்டுபவர்கள் வி. சிவஞான யோகிகளுக்கு எழுதித்தருவித்துக்கொல்லலாம். இதன் விலை ரூபா ௧-0-0.